சிரித்திரன்

இலங்கையில் விவசாயத்திற்குச் சிறந்த இடம் யாழ்ப்பாண ரோட்டு.... நல்ல நீர்வளமுள்ள இடம்.

சிரித்திரன் சிறுகதை.

அடுத்த இதழில்
கே. ஆர். டேவிட்
எழுதும்

'இரண்டு நிர்வாணங்கள்'
வெளியாகின்றது.

*

சிறுகதைச் சுவைஞர்களே!

சிறுகதை பற்றிய உங்கள் கருத்தை எழுதுங்கள். பிரசுரிப்போம்.

டிசம்பர் 1977

விலை சதம்

75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகை: 15 சுவை: 2

செய்தொழில் தெய்வம்
சிரிப்பே சீவியம்.

இரசிகமணி சுவைத்த சவாரித்தம்பர்



இரசிகமணி கனகசெந்திநாதன் அவர்கள் இலக்கிய ரசிகர் மட்டுமல்ல, பெரும் நகைச்சுவை ரசிகரும்கூட.

ரஷ்யாவில் எல்லோரும் விண்வெளிக்கு அனுப்பிய "ஸ்புட்னிக்" திரும்பி வருகிறதா என்று விண்வெளியைப் பார்த்துக்கொண்டு நிற்பார்கள். நமது யாழ்ப்பாணத்திலும் விண்வெளியைத்தான் பார்த்துக்கொண்டு நிற்பார்கள் - முட்டி நிறையக் கள்ளு வருகிறதா என்று பார்ப்பதற்கு.

இந்த நகைச்சுவைக் கருத்தை நான் தினகரனில் "சவாரித்தம்பர்" கார்ட்டூனில் வரைந்திருந்தேன். இதைப் பாராட்டி "ஈழத்து இலக்கிய வளர்ச்சி" என்ற அவர் எழுதிய புத்தகத்தில் பாராட்டியுள்ளார்.

- சுந்தர்

பசுமைப் புரட்சி

எமது புது அரசாங்கம் பசுமைப் புரட்சி தீவிரமாகச் செய்கிறதா...
சந்தோஷமான செய்தி

பஸ், கட்டிடமெல்லாம் தமது பச்சை வர்ணத்தைப் பூசுகிறது.

• •



நீ 77 ஆம் ஆண்டு செய்த சாதனை என்ன?

77 ஆம் ஆண்டையும் உத்தியோகமில்லாமல் வெற்றிகரமாகக் கழித்துவிட்டேன் என்பதுதான்.

• •

முதல் பைத்தியம்: என்ன, தலையில் தலைப்பாகை?

இரண்டாம் பைத்தியம்: இப்போ யாழ்ப்பாணத்தில் ஆமிக்காரன் ஹெலிக்கொப்டரில் பறந்து திரியிறான்... எட்டிக் குட்டியிடுவான்.

• •



பாலு: ஏண்டா... நீ மேற்படிப்பைத் தொடரவில்லை?

ராஜு: நான் படித்த பாடசாலையில் மேல்வகுப்புகளில் மாணவிகளில்லை...

• •

வாலிபன்: கண்ணே... உன்னை நான் காதலிக்கிறேன்!

பெண்: கையில் பணமில்லாதவனுக்கு என்ன காதல்

வாலிபன்: அரசாங்கம் மாதம் ஐம்பது ரூபா தரப்போகுதாம். அந்தத் துணிவில்தானே காதல் பிறந்தது.

• •

திருடன்: திருட மாட்டேன்; கடத்தல் வியாபாரம் செய்வேன் என்பதுதான் எனது புதுவருடத் தீர்மானம்.

- ஜோக்கிரட்டீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய ரசனை உயர தனது உயிரை உரமாக்கியவர்

- நவாலியூர் நடேசன்

பண்டிதமணி கணபதிப்பிள்ளை என்னும் தமிழ்ப் பாரம்பரியம் மிக்க விருட்சத்தின் வேரிலே முளைவிட்டு ஓங்கி வளர்ந்து சுவைமிகு இலக்கிய நறுங்கனிகளைச் சொரிந்த கனக. செந்திநாதன் என்னும் விருட்சம் சாய்ந்துபோன நிகழ்ச்சி ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகிற்குப் பேரிழப்பாகும்.

பண்டிதமணியின் நிழலிலே எனது இலக்கிய ரசனை வளர்ந்தது என்று அருமையோடு கூறிவந்த அவர், பழைய மரபிலே நின்று தெளிந்த புதுமை இலக்கியங்களை அள்ளித் தந்ததுடன், இரசனை உணர்வுகளையும் நயமாக ஊட்டி இரசிகமணியாகத் திகழ்ந்தார்.

ஈழத்து எழுத்தாளர்களை அறிமுகம் செய்து, அவர்கள் வளர வழிகாட்டி - நீண்ட இலக்கியப் பரம்பரையின் மதிப்பிற்குரியவராக விளங்கினார்.

இலக்கியமே சிந்தனை; இலக்கியமே பேச்சு; இலக்கியமே மூச்சு என வாழ்ந்த இரசிகமணி நூல்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியவற்றை வாங்கிச் சேகரித்துத் தனது இல்லத்தை அறிவுக்கூடமாக அலங்கரித்தார். இலக்கிய வரலாற்றில் அரிய குறிப்புக்களையும், இரசனைத் துளிகளையும் தனது ஞாபகத்திலிருந்தே அநாயாசமாகப் பொழிந்துதள்ளும் ஆற்றல் வாய்ந்த இரசிகமணியை 'எழுத்து' சஞ்சிகை 'நடமாடும் நூல் நிலையம் என்று வர்ணித்தது.'

''என்னடா அப்பா... நான் ஒரு தமிழ் வாத்திதானே'' என்று சில வேளைகளில் அவர் கூறுவதுண்டு. ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகிற்கு அந்தத் தமிழ் உபாத்தியார் ஆற்றிய சேவைகளின் ஆழம்; மேன்மை வியக்கத்தக்கன. பழைய மரபுவழி நின்று எழுதும் பண்பு பேணிய இரசிகமணி சமுதாயத்தின் போலி மரபுகளைத் தனது சுய வாழ்விலேயே விளம்பரமின்றி உடைத்து வாழ்ந்தவர். அன்னார் ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகின் பெருமையான ஒரு சகாப்தம்.

இலக்கியக் கூட்டங்கள், நாடகங்கள், திரைப்படங்கள், புத்தகக் கடைகள் என்று சுறுசுறுப்பாக ஓடித் திரிந்து காணும் எழுத்தாளர்களோடு 'இலக்கியச்சமா' வைத்து மகிழ்ந்த இரசிகமணி நோயால் பீடிக்கப்பட்டு வெளியில் இனிமேல் செல்லமுடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுக் கிடந்தார். அந்நிலையில் அவர் இலக்கிய உள்ளம் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கும் என்ற அனுதாபத்தோடு அவரைப் பார்க்கச் சென்றேன். எதுவித மனச்சோர்வும் இல்லாதவராய் தனக்குரிய மகிழ்ச்சிக் கலகலப்புடன் வரவேற்று இலக்கியம் குறித்து மூச்சுவிடாது சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார்.

அவரது மெலிந்த உடலினுள்ளே இலக்கிய உணர்வு என்ற சக்தியே அவரை இயக்கிக்கொண்டிருப்பதாக அப்போது உணர்ந்தேன். ''ஒரு கூண்டினுள்ளே அழகான பறவையொன்று சிறகடித்துக்கொண்டிருப்பது போல அவரது மெலிந்த உடம்பினுள் ஆத்ம ஒளி சுடர் விட்டுக்கொண்டிருந்தது.'' என்று லூயி விஸ்ஷர் மகாத்மா காந்தியடிகளைத் தரிசித்த பின்பு எழுதிய உவமை அந்நேரத்தில் என் நினைவிலே மிதந்தது.

அந்தச் சந்திப்பின்போது உரையாடுகையில் இரசிகமணி உதிர்த்த கருத்தொன்றை இங்கு தருகின்றேன்: ''தமிழ் எழுத்தாளன் கட்டாயம் பழைய தமிழ் இலக்கியங்களைப் படித்து அவற்றின் உட்பொருட்களையும், வேறு சிறப்பியல்புகளையும் உணர்ந்து தனது அறிவை வளர்த்துப் பண்படுத்தவேண்டும். அந்த நூல்களைப் படிக்கும் ஆற்றல் இல்லை என்பதற்காக அவற்றைப் ''பழைமை'' என்று தூற்றுவது பெரிய அறியாமை. அறியாமையால் சமுதாயத்திற்கு அறிவைப் புகட்ட முடியாது.'

நீண்ட நேரம் உரையாடிய அச்சந்திப்பின் போது ''இரண்டு பூக்கள்" என்ற பாட்டிடையிட்ட நாடகப் பிரதியைப் பத்திரிகையில் வெளியிடுவதற்கும், பின்பு நூலுருவமாக்குதற்கும் என்னிடம் கையளித்தனர்.

இரண்டு மாதங்களின் பின்பு மீண்டும் அவரின் இல்லம் சென்றேன். அவரது உற்சாகம் குறையாதிருந்தாலும் காது கேட்பது மந்தமாக இருந்தது.

அன்று அவர் இக்காலக் கவிதைகளிலே தொடங்கி பழைய இலக்கியங்களிலே புகுந்து, 'நந்திக் கலம்பக'த்தில் நின்று பேசினார்.

நந்திவர்மன் இறந்த பின்பு கவிஞனாகிய அவனது தம்பி வருந்திப் பாடிய கவிதைகளுள் ஒரு கவிதையை அப்படியே சொல்லி, அதன் நயத்தை ஆகா போட்டு எடுத்து விளக்கினார். அக்கவிதை இதுதான்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் மேனி
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுன் மேனி
யானும் என்கவியும் எவ்விடம் புகுவோம்
எந்தையே நந்தி நாயகனே!

வழக்கத்திற்கு மாருக அன்று-அவர், ''சரி இருண்டு விட்டுது; நீரும் போகவேணும்'' என்ருர். அவரிடம் விடைபெற்றுத் திரும்பும்போது வழியெல்லாம் அப் பாடல் பற்றியும், அதனை விளக்கிய இரசிகமணியைப் பற்றியும் மனம் எதிரொலித்தது. இப்போதும் அந்த ஒலி ஓயவில்லை.

★

அணுக்குண்டு

நீறு பூக்கும்,
மொட்டு.

(உண்)மை சுடும்



போலிக் கலைஞனுக்கு
விமர்சன
மை சுடும்.
காமாந்தகனுக்கு
கற்புடைய கன்னியரின்
கண் —
மை சுடும்.

- சித்திரபானு

பரீட்சை முடியுது லீவு வருகுது!



கனகம்: நான்தான் வீட்டுவேலையெல்லாம் செய்து தொலைக்கிறது

கமலம்: பள்ளிக்கூட லீவு வருகுது... பிள்ளைகள் உதவிசெய்யுங்கள் தானே.

கனகம்: லீவு காலம் தானே 'பிரெஷர்' வாற காலம்.

பல் காரம்



ஹிப்பிக் கூட்டமொன்றை வீதியில் பார்த்த புலவர் ஒருவர், ''பாவம் ஹிப்பிகள்... குயில் மாதிரி வீடில்லாததுகள்'' என்ருர்.

❋

யாழ்ப்பாண நகரிலுள்ள தியேட்டர்களில் படம் முடிந்து போகும் மக்கள் கூட்டத்தைப் பார்த்த ஓர் ஆங்கிலேய உல்லாசப் பிரயாணி, ''டோக்கியோ நகருக்கு அடுத்தபடியாக யாழ்ப்பாணத்தான் ஜன நெருக்கடியுள்ள நகரம் என்ருர்.

❋

கொப்பிகளுக்குத் தட்டுப்பாடு என்பதை மாணவர்களிடமிருந்து அறிந்துகொண்ட ஆசிரியர், ''கொப்பிகள் நிறைய வேண்டும்; கொப்பியடிப்போர் குறைய வேண்டும்" என்ருர்.

❋

எங்கு பயணம் போகும்போதும் சுருட்டுக் கட்டுச் சகிதம் போகும் அம்மான் ஒருவர், சிங்கப்பூர் போய் விட்டு, அங்கு ஒரு செக்கன்ட்கூடத் தங்காது ஓடோடி வந்து விட்டார். காரணம் கேட்டபோது, '' நான் கோடாப்போட்ட சுருட்டுக் குடிப்பவன். துப்பிக்கொண்டிருக்க வேண்டும். சிங்கப்பூரில் துப்புவது, சுருட்டு, சிகரட் குறைகளைக் கண்ட இடத்திலும் போடுவது பெரும் குற்றம். இலங்கை எங்களுக்கு ஒரு மோட்சம்." என்ருர்.

❋

வன்செயலால் காயமுற்று வீதியில் நிற்கும் சிலைகளைப் பார்த்து, '' சிலைகளுக்குச் சொந்தக்காரர்கள் இல்லையா அவற்றிற்கு வைத்தியம் செய்விப்பதற்கு" என்று கேட்கின்ருர் தமிழன்பர் ஒருவர்.

❋

வன்செயலால் பாதிக்கப்பட்டோரைப்பற்றித்தான் எல்லோரும் பேசுகின்ருர்கள்... 'வான்' செயலால் பாதிக்கப்படும் எம்மைப் பற்றி ஒருவரும் பேசுகிருர்கள் இல்லையே!'' என்று பெருமூச்சு விடுகின்ருர், தினமும் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வானில் பிரயாணம் செய்து முதுகு முறிந்துபோன உத்தியோகத்தர் ஒருவர்.

❋

''சிறைசென்ற பெரும்பாலோர் எழுத்தாளர்களாக மாறியிருக்கிருர்கள்; சீதையைத் தவிர'' என்கிருர் நமது மகுடியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ஆனந்தவிகடன் மணியனின்
சிரித்திரன் அலுவலக விஜயம்.

இதயம் பேசுகிறது

ஏதேனும் சந்தோஷமான செய்தி சொல்லவேண்டுமானால் எனது துணைவியார் வீட்டுவாசலில் வந்து காத்து நிற்பார். துக்கமான செய்தி சொல்ல வேண்டுமானால் வாசலைத் தாண்டி றோட்டுக்கே வந்துவிடுவார். அன்று நான் அலுவலகத்தால் வருவதைக் கண்டதும் றோட்டை நோக்கி வந்துகொண்டிருந்தார். துக்கமான செய்தி என்னைக் காத்திருக்கிறது என்று என்நெஞ்சம் படபடத்தது. அவர் அப்போது அடக்கமுடியாத கவலையுடன் 'லதா அக்சிடென்ற்' என்றார். என் இரத்தமெல்லாம் உறைந்து விட்டதுபோல் இருந்தது. மனம் படபடக்க, ''எந்த ஆஸ்பத்திரியில் அவளை 'அட்மிட்' பண்ணியிருக்கு?" என்று ஹொஸ்பிட்டலுக்குப் போகத் திரும்பினேன்.

அப்போது பக்கத்து வீட்டு லதா, ''மாமா'' என்று சொல்லிக்கொண்டு ஓடி வந்தாள். ''என்ன... எங்கள் லதா இங்கே நிற்கிறாளே...'' என்றேன் நான். ''நான் சொன்னது மணியன் எழுதும் 'இதய வீணை'யில் வரும் லதா'' என்றார் மனைவியார்.

அப்படியெல்லாம் வாசகர்களின் இதயங்களை அழுத்தும் வகையில் எழுதும் 'ஆனந்தவிகடன்' மணியன் எமது வீட்டுக்குத் தனது புகைப்படப்பிடிப்பாளர் சுந்தரம் சகிதம் நாம் எதிர்பாராதவாறு வருகை தந்தார். எனது மனைவி எப்படி உபசரிப்பது என்று புரியாது திணறினார். அதை உணர்ந்த மணியன், ''அம்மா, நாளை பிறைம் மினிஸ்டரைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குமுன் எத்தனையோபேரைச் சந்திக்கவேண்டியிருக்கு'' என்று கூறிவிட்டு சிரித்திரனைப் பற்றி எல்லாம் ஒரு நோட் புத்தகத்தில் குறித்துக்கொண்டு சில புகைப்படங்களும் பிடித்துக்கொண்டு எம்மிடம் விடைபெற்றுச் சென்றார்.

ஜெட் விமானத்தில் உலகெல்லாம் பறந்து திரியும் மணியனும் இன்று ஜெட் வேகத்தில்தான் இயங்குகின்றார். சுறுசுறுப்பான உழைப்பாலேதான் அவர் எழுத்துலகில் உயர்ந்திருக்கின்றார் என்பதை அவரின் சிறிதுநேரச் சந்திப்பின் பின் உணர்ந்தேன்.

அணுக்குண்டை மனிதன் எப்பொழுது ஹிரோஷிமா நாகாசாக்கியில் போட்டானோ, அன்றே மனிதன் இதயமில்லாமல் இயங்கும் இரண்டு கால் பிராணி என்ற முடிவுடன் இருந்தவன் நான். ஆனால் மணியனை எண்ணும்போது அவர் மனிதனின் இதயத்தில் அபார நம்பிக்கை உள்ளவர்போல் தோன்றுகின்றது. அவர் இதயமில்லாது எதையும் எழுதுவதில்லை. இதயவீணை, இதயம் பேசுகிறது, இதயச்சுரங்கம் என்று இதயத்திற்கு முதலிடம் கொடுத்துத்தான் எழுதுகின்றார். இன்று அவர் 'இதயம் பேசுகிறது' என்ற பெயருடன் புதிய சஞ்சிகை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளார். அவரது சஞ்சிகை எல்லோரது இதயவீணைகளிலும் அபூர்வ ராரங்களை மீட்ட வேண்டுமென சிரித்திரன் இதயபூர்வமாக வாழ்த்துகின்றான்.

மணியன் எம்மிடம் விடைபெற்றுப் போகும்போது ''கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தியுடன் துணை நின்று நிகரற்ற நகைச்சுவைச் சித்திரங்களால் விகடனை வளர்த்தவர் மாலி. அவரின் ஓவியங்களை ஏன் புத்தகமாக வெளியிடவில்லை?'' எனக் கேட்டேன். ''நாங்கள் அதைச் செய்யவேண்டும். I consider him greater than even David Low'' என்று கூறி என் காதைக் குளிர வைத்தார்.

அவருடன் கூடவந்த சிரித்தமுகம் சுந்தரம் இன்னும் என் கண்ணுக்குள்ளே சிரித்துக்கொண்டே இருக்கின்றார்.

- ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்ச்சில் பாராட்டினர்

வின்சன் சேர்ச்சில் சிங்கப்பூர் துறைமுகத்தை அதிக பணச் செலவில் விஸ்தரித்தார். இந்த விஸ்தரிப்புப் பயன் தராது என்றும், ஒருநாள் அது தூரகிழக்கு ஆசிய வல்லரசால் தாக்கப்படும் என்றும் டாக்டர் நாகநாதன் இலண்டன் பத்திரிகையொன்றில் கட்டுரை எழுதியிருந்தார். இரண்டாம் உலக மகா யுத்தத்தில் யப்பானுல் சிங்கப்பூர்த் துறைமுகம் தாக்கப்பட்டு சின்னுபின்னப்படுத்தப்பட்டது. நாகநாதனின் தீர்க்க தரிசனம் மெய்யானது.

அவரின் திர்க்கதரிசனத்தைப் பாராட்டி, வின்சன் சேர்ச்சிலும், அண்டர்சனும் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

ஈழத்து

இனிய இலக்கிய மாத இதழ்

மல்லிகை

நிர்வாகி:

மல்லிகை

234, ஏ, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

லட்சுமிகரம்

சித்திரபானு

திரைப்படத்தைப் பற்றி பத்திரிகைகளில் வந்தால் குப்பைப் பக்கம் என்று அந்தப் பக்கத்திற்குக் குட்டை சொல்லிவிட்டு மற்றப் பக்கங்களைப் படிப்பேன். அன்று தினமணிக்கதிரில் ''சில சமயங்களில் சில சம்பவங்கள்'' என்ற லட்சுமி எழுதும் தொடரை வாசித்துவிட்டு, குப்பையிலும் குண்டுமணியென்ன, முத்துக்களுமுண்டு என்பதை உணர்ந்தேன்.

''ஆந்திரப் பட பிரபல நடிகரான ஏ. நாகேசுவரராவுடன் ஒரு படத்தில் நான் நடிக்கச் சென்றிருந்தேன். வாழ்க்கையின் முக்கியமான தத்துவங்களை அவர் பக்குவமாகச் சொல்லும் ஆற்றல் படைத்தவர். எதைப் பற்றியாவது மனக்குழப்பமோ, மனவருத்தமோ அடைந்து நான் துயரத்தோடு உம்மென்று இருப்பதை அவர் கண்டுவிட்டால் பெருந்தன்மையோடு சில உபதேசங்களைச் சொல்லி என் வாட்டத்தைப் போக்கிவிடுவார்.'' என்று லட்சுமி, நாகேசுவரராவ் கூறியதை பின்வருமாறு எழுதியிருந்தார்.

''யாருக்கும் யாரும் எதிரியல்ல. நாம்தான் நமக்கு எதிரி. ஒவ்வொரு மனிதனும் கிட்டத்தட்ட பஸ்மாசுரன் போன்றவன்தான். தன் கையைத் தன் தலையிலேயே வைத்துக்கொண்டு தன்னையே வீழ்த்தி விடுவான். இந்த உண்மையை நீங்கள் உணர்ந்து கொண்டு விட்டால் வேறு சில விரோதிகள் உங்களுக்கு இருப்பதாக நினைக்கமாட்டீர்கள்.''

இதைப் படித்தபின் பத்திரிகைகளில் வரும் திரைப்படப் பகுதியில் நல்ல விஷயங்களை என் கண்கள் தேட ஆரம்பித்துவிடுகின்றன.

திரைசிங்கம் & திரைசாமி

நான் பரீட்சையில் பாஸ் பண்ணினுல் புண்ணிய தானம் செய்வதாகநேர்த்தி

என்ன புண்ணியதானம்?

ஒரு முப்பது பேருக்குப் படம் பார்ப்பதற்கு டிக்கற் எடுத்துக் கொடுப்பதாக நேர்த்தி.

மனிதன் முகத்திலொன்று, முதுகிலொன்று பேசுகிருனே ஏன்?

அதுதான் பேச்சுச் சுதந்திரம்.

- ஜோக்கிரட்டீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகுடி

சி. கலைச்செல்வி, யாழ்ப்பாணம்.
கே: மகுடியாரே! அடிமை இனத்தால் கலை உலகில் சேவை புரிய முடியுமா?

ப: விலங்கு மாட்டப்பட்ட கைகளால் வீணை வாசிக்கமுடியாது.

——

சி. விஜயன், உரும்பாரய்.
கே: பொருமைக் கண்கள் எப்படிப்பட்டது?

ப: இரட்டைக்குழல் துப்பாக்கி போன்றது.

——

வி. நாகராஜா, குருநாகல்.
கே: அரசியல்வாதிக்கும் விவசாயிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: அரசியல் வாதி தூற்றிப் ''போர்'' அடிப்பவர்; விவசாயி போரடித்துத் தூற்றுபவர்.

எம். மலர், யாழ்ப்பாணம்.
கே: மூன்று முடிச்சு படம் பார்த்தீரா மகுடியாரே?

ப; நான் மூன்று முடிச்சுப் போட்டவள் சும்மா விடுவாளா என்ன!

——

எம். ஏ. அப்துல் ஜபார்.
காத்தான்குடி.
கே: சொத்து என்பது திருட்டு. உமது கருத்து?

ப திருட்டு மட்டுமா... திமிரும் கூட.

——

சி. எம். கலீல், கண்டி.
கே: கண்டியில் எனக்குப் பொழுது போகுதில்லை... யாழ்ப்பாணம் வந்தால் பொழுது போகுமா?

ப; வாரும் தம்பி... பஸ் நிலையத்தில் தவறி விழும் காதல் கடிதங்களில் கப்பல் செய்து, பஸ் நிலயக் கடலில் ஓட்டி விளையாடலாம்.

——

தெ, மயில்வாகனம், வவுனியா.
கே: எழுத்தாளனின் மனைவி பற்றி உமது கருத்து!

ப: கணவன் எழுதும் போது தூங்குவாள்... அவர் எழுதியவற்றை பழைய பேப்பர்காரன் தராசில் நிறுத்துப் பார்க்கும் போது விழித்திருப்பாள்.

——

சி. ஏ. ஹமீட், அக்கரைப்பற்று.
கே: ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தேர்தலில் தோல்வி அடைந்ததற்குக் காரணம் என்ன?

ப: அவர்கள் உடலிலும் நீலம் பாய்ந்துவிட்டது.

எஸ். திருச்செல்வன், மாங்குளம்.
கே; வாழ்க்கை என்பது என்ன?

ப: வாழ்க்கை ஒரு பரீட்சை. பாடசாலையில் விழித்திருந்தவனுக்கு கல்விக்காலம் முடிந்ததும் பரீட்சை முடிவடைகின்றது. பாடசாலையில் தூங்கியிருந்து வெளியேற்றப்பட்டவனுக்கு வாழ்க்கையில் பரீட்சை ஆரம்பமாகின்றது.

——

சி. தியாகராசா, மயிலிட்டி.
கே: காதல் பிறப்பது எங்கே? ஞானம் பிறப்பது எங்கே?

ப: நிறம் பூத்த பூங்காவில் காதல் பிறக்கும்... நீறுபூத்த சுடுகாட்டில் ஞானம் பிறக்கும்.

——

இ. மணவாளன், யாழ்ப்பாணம்.
கே. உலகம் எப்படிப் போய்க் கொண்டிருக்கின்றது?
ப: காடுகள் அழிந்து கொண்டிருக்கின்றது; வெள்ளக்காடுகள் பெருகிக் கொண்டிருக்கின்றது.

——

எஸ். விஜயேந்திரன், துணுக்காய்.
கே: எது வாழ்வு? எது அழிவு?

ப: ஆறு திசை திரும்பினுல் வாழ்வு. ஆகாய விமானம் திசை திரும்பினுல் அழிவு.

——

ப. ஆனந்தவேல், உருத்திரபுரம்.
கே: காதலுக்கும், தேர்தலுக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

ப: காதல் காலத்தில் தேனே... பாலே என்பார்கள்; தேர்தல் காலத்தில் தேனும்பாலும் ஓடச் செய்வோம் என்பார்கள்.

——

எஸ். எம். ஏ. பஸீர், கல்முனை.
கே: உமது வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறதா?

ப: எனது வயதும், ரிஸ்ட் வாட்சும் ஓடிக் கொண்டிருக்கின்றது; நான்தான் பஸ்நிலையத்தில் நின்று கொண்டிருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. ஆனந்தவல்லி,
மட்டக்களப்பு.

கே; பட்சிகள் ஆடிப்பாடி மகிழ்கின்றனவே... மனிதனுக்கு ஏன் அந்த மகிழ்ச்சி இல்லை?

ப: பட்சிகளுக்குள் இன்னும் அரசியல் வாதிகள் தோன்றவில்லை.

——

க. பொன்னையா,
பருத்தித்துறை.

கே: விவாகரத்திற்குக் காரணமென்ன?

ப: கணவன் - மனைவி ஊடலுக்குள் பிறர் ஊடுருவல்.

——

எஸ். ராஜம், சாவகச்சேரி.

கே: நடிகர்களின் நடிப்பை விமர்சிப்பதற்குப் பதிலாக அந்தரங்க வாழ்க்கையைப் பேசிச் சுவைப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

ப: கனியிருக்க வேரைச் சுவைக்கும் ரசஞானிகள்.

——

பி. மரியாம்பிள்ளை,
திருகோணமலை.

கே: வருங்காலம் பற்றி உமக்குப் பயமேதும் உண்டா?

ப: செயற்கை உரத்தில் வளரும் மரங்கள் இயற்கையை இழந்து விடுமோ என்ற பயம் உண்டு.

——

சி. விஜயபாலன், பளை.

கே: பாடசாலை நேசம் நீடிக்குமா?

ப: பள்ளி அறைக் காதல் மணவறை போய் மனை அறை வரை நீடிப்பதில்லையா!

——

வி. விசாலாட்சி, கரவெட்டி.

கே: மகுடியாரே! உங்கள் குடும்ப ஒற்றுமையின் சூட்சுமம் என்ன?

ப: மனைவி சிலையாயிருக்கும் போது, நான் உருத்திரமூர்த்தியாய்த் தாண்டவமாடுவேன் ... மனைவி பத்திரகாளியாய் மாறும் போது நான் சிலையாவேன்.

சி. பாக்கியராஜா,
அநுராதபுரம்.

கே: அன்று ஜனநாயகம் இருந்ததா?

ப: அன்றுதான் உண்மையான ஜனநாயகமிருந்தது. மரண தண்டனை விதிக்கப்பட்ட சோக்கிரட்டீஸிற்கு தன் கையால் விஷம் குடிக்கும் உரிமையை வழங்கினார்கள். இன்று பிறர் கையால் அல்லவா மரணதண்டனை நிறைவேற்றப்படுகின்றது.

——

சி. மணியம், மீசாலை.

கே: பக்தனுக்கும் படத்தயாரிப்பாளனுக்குமுள்ள வித்தியாசம் என்ன?

ப: பக்தனுக்கு அவனின்றி அணுவும் அசையாது; படத்தயாரிப்பாளனுக்கு 'அவளின்றி' அணுவும் அசையாது.

——

வி. ரவீந்திரன், புலோலி.

கே: கூறாமல் சன்னியாசம்கொள்ளும் நிலை உமக்கு ஏற்படுவதில்லையா?

ப: ஏனில்லை... மனைவி தமிழ்ப் படம் பார்த்திட்டு வந்து பாராட்டும்போது ஏற்படுவதுண்டு.

——

வ. செல்லையா, புத்தளம்.

கே: எமது அரசியல் வாதிகள் எதிர்காலச் சிற்பிகள்...?

ப: சிற்பிகள்தான்... பனிக்கட்டியில் சிற்பம் செதுக்கும் சிற்பிகள்

——

ஜீ. வாசன், ஊர்காவற்றுறை.

கே; ஏய்...மகுடியாரே! நானொரு யூ. என். பி. அங்கத்தவன்... எழுதுவதை ஜாக்கிரதையாக எழுது.

ப; "பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது கருடா சவுக்கியமா?"

——

த. விஜயா, மானிப்பாய்.

கே; மகுடியாரே... சுசீலா, ஜானகி, வாணி ஜெயராம் இம் மூவரில் யாருடைய பாடல் உமக்குப் பிடிக்கும்?

ப: முக்கனியில் எக்கனி சுவையென்று கேட்கலாமா?

——

செ. ஜயந்தன், களுவாஞ்சிக்குடி.

கே: உலக யுத்தம் ஏற்பட்டால்...?

ப: அஸ்தி இருக்கும்; அஸ்தி கரைப்பதற்கு ஆள் இருக்காது.

——

வி. ஜெயகேசன், முருங்கன்.

கே: மகுடியாரே! நீர் லஞ்சம் வாங்கியது அல்லது கொடுத்ததுண்டா?

ப: வாழ்க்கையில் ஒரேயொரு லஞ்சம் வாங்கியிருக்கிறேன்... மனைவி தந்த கணையாளி. ஒரே ஒரு லஞ்சம் கொடுத்திருக்கிறேன் ...தாலி

——

த. ஜவாகர், சித்தன்கேணி.

கே: கணவனை அடிக்கும் பெண்களைப்பற்றி நீர் கற்பனைபண்ணுவதுண்டா?

ப: ஏனில்லை... மணவறை போகும்போது, அடிமேல் அடி வைத்துப்போனவள், இன்று அடிமேல் அடிஅடிக்கிறாள் என்று கற்பனை பண்ணுவதுண்டு.

——

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட விமர்சனம்

KARAKATOA EAST OF JAVA
"கரகாட்டோ ஈஸ்ட் ஒப் ஜாவா"

- கலைவாதி கலீல்

"கரக்கட்டோ ஈஸ்ட் ஒப் ஜாவா" (KARAKATOA EAST OF JAVA) என்றொரு ஆங்கிலத் திரைப்படம் வெளிவந்திருக்கிறது. படமா அது? 'தத்ரூபம்' என்றால், அது அங்கேதான் இருக்கிறது.

கதை இதுதான். எரிமலைகள் நிறைந்த ஜாவாத் தீவை நோக்கி ஒரு கப்பல் போய்க்கொண்டிருக்கிறது. அந்தக் கப்பலில் சிறைக்கைதிகள் பலரும் கொண்டு செல்லப்படுகின்றனர். கடலில் அமிழ்ந்து கிடக்கும் ஒரு நீர்மூழ்கிக் கப்பலைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். எரிமலை வெடித்து ஊரே துவம்சமாகிறது. கடல் வேறு பொங்கித் தொலைக்கிறது. அதனூடே கப்பலைப் பக்குவமாகக் கொண்டு வந்து சேர்க்கிறான். கப்பல் 'காப்டன்'. இந்தச் சாதாரண கதையை வைத்துக்கொண்டு சற்றும் விறுவிறுப்புக் குன்றாத பிரமாண்டமான படம் ஒன்றைத் தயாரித்திருக்கிறார்கள். இரண்டரை மணித்தியாலங்கள் அலுப்பே தட்டவில்லை.

இத்தனைக்கும் படம் ஆடியசைந்து அமைதியாகவே நகர்கிறது. படத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரை எங்காவது தொய்வு விழவில்லை. மயிர்க் கூச்செறியும் காட்சிகள், மலைக்கவைக்கும் கட்டங்கள், உள்ளத்தை நெகிழவைக்கும் சம்பவங்கள் நிறைந்து காணப்படுகின்றன. பலூனின் காற்றடி பழுதாவதால் பலூன் எரிமலைக் குமிழுக்குள்ளேயே ஆட்களுடன் இறங்குவது, சிறைக்கைதிகளைக் 'காப்டன்' கொல்லுவது, பொங்கி வரும் கடல். சதா கக்கிக்கொண்டிருக்கும் எரிமலைத் தீக்குழம்பின் கோரதாண்டவம்; இவையெல்லாம் 70 எம். எம்மில் திகில்ஊட்டி, மனதில் அழுத்தமாகப் பதிகின்றன.

கப்பல்காப்டனாக நடித்திருக்கும் (தவறுதவறு மாறியிருக்கும்) "மக்ஸ் மில்லியன்ஷெல்" மெலிந்த, இறுக்கமான உடலுடன், கம்பீரமான முகத்தைக் கொண்டே பிய்த்துத் தள்ளிவிடுகிறார். உலகமே தலைகீழாய்ப் புரளும்போதும், கலங்காத அஞ்சா நெஞ்சம், ஆண்மை, துணிவு அவரது தோற்றத்திலும், முகபாவத்திலும் தெரிகின்றன. நடுக்கடலில் நெருப்பு ஊற்றாக நீர் பொங்கி எழுந்து ஓய்ந்த பின்னர் மரணபீதியுடன் நிற்கும் உப கப்டன், கப்டனிடம், "அடுத்த நடவடிக்கை என்ன" என்று கேட்கும்போது. 'இராச்சாப்பாட்டை முடித்துக் கொள்வதுதான்" என்று காப்டன் சொல்கிறாமே அந்த இடம் ஏ வண்!

படத்தின் ஆரம்பத்தில் ஒரு அழகிய ஜாவாக் குழந்தை அழுகிறது. படம் முடியும்வரைக்கும் அழுத கொண்டே இருக்கிறது. அதன் அழுகையை நிறுத்த எவராலுமே முடியவில்லை. அக்காட்சி அபாரம். மனதை நெகிழ வைக்கின்றது.

உயிருக்குயிரான நண்பனாயிருந்தாலும், அவனுக்கும் மற்றவருக்குப் போலவே உரிய தண்டனை வழங்கும் அழுத்தம்; அதே நேரத்தில் வாய்க்கப்பெற்ற அற்புதப் படைப்பாக ஜொலிக்கிறார், கப்டன் மக்ஸ் மில்லியன் ஷெல்.

எமது தமிழ்ப்படத் தயாரிப்பாளர்களும் கட்டாயம் பார்க்கவேண்டிய படம் இது.

இசை விஞ்ஞானி

இந்தியாவின் தலைசிறந்த அணு விஞ்ஞானியான டாக்டர் சேத்னா இளைஞராயிருந்தபோது மேற்படிப்புக்காக அமெரிக்கா சென்றார். மிஷிகன் பல்கலைக்கழகத்தில் அவருக்குப் பரீட்சை வைத்து முடிவு சொனனார்கள்:

"விஞ்ஞானத்தை விட சங்கீதம்தான் நன்றாக வரும்"

○

சுதந்திரத்தில் நான்கும் உண்டு

தரம் இருக்கின்றது.	(சு)த(ந்தி)ரம்
சுதி இருக்கின்றது.	சு(தந்)தி(ரம்)
சுரம் இருக்கின்றது.	சு(தந்தி)ரம்
தந்திரம் இருக்கின்றது.	(சு)தந்திரம்

○

பெண் தெய்வம்

ஹலோ... ஹலோ தியேட்டர் மனேஜர் ஸ்பீக்கிங்... உங்க கணவன் படம் பார்த்துக் கொண்டிருக்கும்போது மயங்கி மூச்சுப்பேச்சில்லா நிலையில் இருக்கிறார்... உடன் வாருங்கள்.

அவரின் பட டிக்கட்டை எடுத்துக்கொண்டு அவரைக் ஹொஸ்பிட்டலுக்கு அனுப்பிவையுங்க... நான் மிகுதிப்படத்தைப் பார்ப்பதற்கு வருகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணிப்பு

● சிறுகதை

● கோப்பாய் சிவம்

அவன் குழப்பத்தில் ஆழ்ந்திருக்கின்றான். ஏன் என்று அவனுக்கே தெரியாது! இது போன்ற உணர்ச்சியை அவன அடிக்கடி அனுபவிக்க நேர்ந்திருக்கிறது. குழப்பம் என்ற அந்த உணர்ச்சியின் பின்னணியில் அவனுக்கு ஏற்பட்டிருப்பது வேதனையா? அல்லது கோபமா? இது அவனுக்கே ஒரு புதிர்.

ஆனால் அவனுக்கே தெரிகிறது; தனது முகம் சாதாரண நிலையில் இல்லை. கோபத்தால் சிவந்த அல்லது அழுகையால் உப்பி வெளுத்த அல்லது இது போன்ற ஏதோ ஒருவித மாற்றம் தனது முகத்தில் தெரிகிறது என்பதை அவன் உணர்கின்றான் உணர்ச்சிகளை அப்படியே வெளிப்படுத்தும் முகம் அவனுடையது. உள்ளத்தின் ஆழத்தில் அவற்றை அமுக்கி வைத்துவிட்டு, முகத்தை மலரவைக்கின்ற அந்த ரஸவாதம் அவனுக்குத் தெரியாது.

அவன் அந்த அரைவாசி திறந்திருந்த வாசற்கதவினூடாக வெளியே தெரிகின்ற காட்சியை உற்றுநோக்குவது போன்ற பாவனையில் அமர்ந்திருக்கின்றான். அவனது விழிகள் அந்த வாசலினூடாகத் தெரிகின்ற பெரிய இலுப்பை மரத்தையும், அதன் பின்னால் தூரத்தில் உயர்ந்து தோன்றும் ஒற்றைத் தென்னை மரத்தையும் தாண்டி நீல நிறத்தில் தெளிந்து தோன்றுகிற வானப்பெருவெளியில் எதையோ ஊடறுத்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

அவளது கேள்வி அவனது மௌனத்தை உடைக்கிறது.

''தவம்! ஏன் உங்களுக்குத் திடீரென்று கோபம் வந்தது?" அவன் மெல்லத் திரும்பி அவளைப் பார்கிறான். இதழ்கள் மெல்லப் பிரிந்து, முறுவலைப் பிறப்பிக்கின்றன. — தவறு பிறப்பிக்க முயற்சிக்கின்றன. தனது முக பாவத்தை மாற்றுகின்ற அந்த முயற்சியில் தான் தோற்றுவிட்டதை அவன் உணர்ந்துகொண்ட அதே நேரத்தில், அவளுடைய கூர்மையான விழிகளும் அதனை அவதானித்து அவனின் இதயத்திற்குப் படம் போட்டுக் காட்டுகின்றன. வெளியே ஒற்றைத் தென்னை மரத்தையும் தாண்டி, வானத்தில் நீண்டிருந்த அவனது விழிகள், இப்போது அவள் முகத்தை நோக்கித் திரும்பியிருந்தாலும், அந்த விழிகளின் பார்வை அவளது விழிகளையும் ஊடறுத்துக்கொண்டு அப்பால் சென்றது.

தனது விழிகளினூடு தன் இதயத்தை அவன் படிக்கிறான் என்று அவள் நினைத்தாள். அவளது அந்தப் பார்வையின் தீட்சண்யத்தைத் தாங்க முடியாமல் அவன் பார்வையைத் திருப்பி வேறிடத்திற்கு மாற்றினான். தனது கேள்விக்கு ஒரு மறுமொழியும் வராததிலிருந்தும், அவனது முகபாவத்திலிருந்தும் அவன் இப்போதும் உணர்ச்சிக்குவியலாக இருக்கிறான் என்பதை அவள் உணர்ந்து கொள்ளும்போதே, அதற்குக் காரணமாகத் தானும் இருந்துவிட்டேனோ என்று எண்ணி மனம் சாம்பினாள்.

அந்த மனத்தின் சாம்பிய உணர்வும், அவனது பார்வையின் திட்சண்யமும் சேர்ந்து அவளது முகத்தின் பிரகாசத்தைக் குறைத்தது. அந்தத் திடீர் மாற்றத்தை அவனும் சட்டென உணர்ந்து கொண்டபோது அவனது இதயம் துணுக்குற்றது. ''ஓ...! அவளை மனம்நோக வைத்துவிட்டேனோ?" என்று ஒருகணம் பச்சாத்தாபம் கொண்டு தவித்தான்.

''நான் இவள் மீது கோபம் கொண்டிருந்தேனு? '' என்று அவன் தன்னை - தன் இதயத்தை பரிசீலித்து மீளாய்வு செய்ய முற்படும்போது, அவள் திடீரென்று உள்ளேபோய் மறுபடியும் வந்தாள். அவன்முன்னே தான் கொண்டுவந்திருந்த குளிர் பானத்தை வைத்தபோது அவன் தன் கன்னப்பொட்டுக்களை விரல்களால் தேய்த்துக் கொண்டு மெல்ல நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அப்போது மாலை நேரமாக இருந்தபோதும்கூட அவள் குளிர் பானத்தைக் கொண்டு வந்தது தனது உள்ளத்தின் கொதிப்பை தணிப்பதற்காக என்று நினைத்துக்கொண்டபோது அவன் முகத்தில் உண்மையாகவே ஒரு புனனகை மலர்ந்தது. ஆனால் அந்தப் புன்னகைக்கு அவளிடமிருந்து

பாராமுகம்

''ராஜ ராஜ சோழனை நீங்கள் பார்த்ததுண்டா? பின் எப்படிச் சிலை வைப்பீர்கள்" என்று சி. சுப்பிரமணியம் கேட்டார்.

அதற்கு முதல்வர் கருணாநிதி, ''பரமசிவன், பார்வதியை நீங்கள் பார்த்ததில்லையே! எப்படி சிலை வைத்தீர்கள்'' எனக் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிபலிப்பு வரவில்லை. இப்போது அவள் தனக்குள் சிந்திக்கின்றாள். தான் தவறான முறையில் நடந்துகொண்டேனோ என்று நினைத்துக் கழிவிரக்கம் கொள்கிறாள். இப்போது அவள், அவன் அமர்ந்திருக்கும் அந்தச் சரிவான கதிரையின் அருகில், கீழ்த் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறாள். பாதங்களை ஒருங்குசேர்த்து மார்பளவில் உயர்ந்திருக்கும் முழங்கால்களின்மேல் நாடியை முட்டுக் கொடுத்துக்கொண்டு முதலில் அவன் பார்த்துக் கொண்டிருந்த அந்த வானப் பெருவெளியைப் பார்வையால் துளைத்துக் கொண்டிருந்தனர். அவன் இவளது அந்தத் தோற்றத்தையும் தனது சிந்தனைகளுக்கு எட்டிய அளவில் அவளது மன ஓட்டங்களையும் தனக்குள் இரசித்துக்கொண்டு குளிர்பானத்தை எடுத்து உறிஞ்சினான்.

அவன், ''நான் அவள் மீது கோபம் கொண்டிருந்தேனோ? '' என்று தனக்குள் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டான். உண்மையில் அவன் கோபம், கவலை என்ற உணர்வுகளல்லாத ஏதோ ஒருவகை விபரீத உணர்வையே கொண்டிருப்பதாகப் புரிகிறது. ஒருவேளை அது ஏமாற்றத்தின் விளைவான ஒரு வெறுப்பாக இருக்க முடியுமோ என்று ஒரு சந்தேகம் எழுகிறது.

சம்பவமே இல்லாத ஒரு சிறு சம்பவம் இத்தனை தூரம் தன் மனத்தைச் சிதற வைக்கிறதே என்று எண்ணி அவன் வியப்படைந்தான். ''எண்ணங்களால் வாழுபவர்கள் வெகு சீக்கிரத்தில் திருப்திப்படுகின்ற அதே நேரத்தில் வெகுவேகமாக அவர்களது நினைவுச் சிகரங்கள் உடைந்து நொருங்கிவிடுகின்றன.'' என்று அவன் ஒரு முழுமையான வசனமாகவே தனக்குள் நினைத்துக் கொண்டான். அன்றிரவு 'டயறி' எழுதும்போது அந்த வசனத்தை எழுத வேண்டுமென்று எண்ணி, மனத்திற்குள் மறுபடியும ஒரு முறை சொல்லிக் கொண்டான்.

அவள் இன்னமும் இன்னமும் அதே நிலையில் அசையாமல் இருந்தாள். அவளது பார்வையைப் பின்பற்றி அவனது பார்வை, அந்த நீல வானத்தில் நிலைத்தது. தெளிந்த வானத்தில் வெண்பஞ்சுத்திரளான மேகங்கள் மெல்ல நகர்ந்துகொண்டிருந்தன. அவள் அந்தச் சம்பவத்தைப் பற்றியே நினைக்கிறாள் என்று புரிந்துகொண்டபோது, அவனும் அதே சம்பவத்தை இரைமீட்க முற்பட்டான்.

அன்று மதியம் - அவசரமாக அங்கு வந்த அவள், அவனைத் திரைப்படமொன்றுக்கு வரும்படி அழைத்தாள். அவன் திடீரென்று திகைப்பில் ஆழ்ந்து விட்டான். மிகவும் தரக்குறைவான மூன்றாந்தரச் சினிமா ஒன்றைப் பார்க்க அவள் விரும்புகிறாள் என்பது முதலாவது அதிர்ச்சி. அதற்குத் தன்னையும் அழைக்கிறாள் என்பது மற்றொரு அதிர்ச்சி.

அவன் தன்னை ஒரு உயர் தரமான கலைஞனாகவும், அருமையான ரசிகனாகவும் நினைத்து- அப்படியே தனது சிந்தனைகளை வளர்த்து வருகின்றான். அவள் அதே ஊரில் வசிக்கும் அவனது விசிறி. ஆரம்பத்தில் வெறும் ரசிகை என்று ஆரம்பித்த அந்த உறவு வளர்ந்து ஒரு நல்ல நட்பாக மாறியிருந்தது. அவனது சிந்தனைகள், மன ஓட்டங்களையே அவள் அப்படியே பிரதிபலித்து வந்ததும், எல்லா விஷயங்களிலும் இருவருக்கும் ஒரே மாதிரியான ஆர்வமும், ஈடுபாடும், ரசனையும் அமைந்ததும் அந்த நட்பைப் பலப்படுத்தியது. அவன் இரசித்துப் புகழும் சங்கீதம் நிச்சயமாக இவளுக்கும் பிடித்திருக்கும். அவனுக்கு வெறுப்பையூட்டும் நாடகம் இவளுக்கும் சலிப்பேற்படுத்தும்.

இந்த அளவுக்கு ஒரே மனம், ஒரே சிந்தனை - ஒரே விதமான நோக்கு - ஒரேவிதமான ரசனைகளோடு நெருக்கமான நட்பினை வளர்த்துக் கொண்டபோது இன்றைக்கு அவள் வந்து அந்த மூன்றாந்தரக் குப்பையைப் பார்க்க வேண்டுமென்று அவனை அழைத்த போது...

அவன் அவளைப் பற்றி நினைத்திருந்த நினைவுகள், அவளுக்கென்று அவன் தனது இதயத்தில் கொடுத்திருந்த கௌரவமான புனித ஸ்தானம், அவளைப் பற்றி அவன் உருவாக்கி வைத்திருந்த 'இமேஜ்' பிம்பம்...

ஓ...! நொடிப் பொழுதில் அந்தப் பிம்பம் நொருங்கி விழ,



ஆசிரியர்: இன்று பின்னேரம் பெருந்தொகையான மாணவர் கூட்டம் வரும்.

மனைவி: ஏதும் பேட்டி காணவா?

ஆசிரியர்: இல்லை. ஒரு மாணவனை அடித்துப்போட்டன்.

- கேசரி

ஒருவர்; அன்னியனை நம்பக் கூடாது.

மற்றவர்: அதுசரி! எங்க போக உத்தேசம்?

ஒருவர்: அன்னியநாடு போக உத்தேசம்.

- கேசரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் அந்தத் திரைப்படத்தைப் பற்றித் தனது அபிப்பிராயத்தை மிகவும் அருவருப்போடு கூறினான் அதற்கு அவள் சமாதானங்கள் சொன்னாள்.

''தவம்! தாக்குறைவான ரசனையிலே மூழ்கிக்கிடக்கிற ஒரு கூட்டத்தை நாம் இழிவாக நினைத்து ஒதுக்கித் தள்ளுகிறோம். அதே நேரம் அதிஉயர்வான - பெரும்பாலும் புத்திஜீவிகளுக்கு மட்டுமே உரியதான - இன்னொரு விதத்தில் சொல்வதானால் புனிதக் கலைகளென்று நாம் நினைக்கின்ற சிலவற்றை மட்டும் ரசித்துக் கொண்டு, அந்த வட்டத்துக்குள்ளே மட்டும் சுற்றிக்கொண்டிருக்கிறோம். இதுவும் ஒருவகையில் தவறுதானே?"

அவள் அந்தக் கேள்வியுடன் நிறுத்தி, அவனை நிமிர்ந்து நோக்குகிறாள். அவன் திடீரென்று அக்கேள்விக்கு மறுமொழி கூறமுடியாமல் - அல்லது கூற விரும்பாமல் மௌனமாக அவளது விழிகளைத் தவிர்த்துத் தன் பார்வையை விலக்குகிறான். அவளது கேள்விக்குப் பொருத்தமாகவும், அழகாகவும் விடை சொல்ல வேண்டும் என்ற நினைவுடன் சிந்தித்துக்கொண்டு விழிகளை அவள் மேல் மேயவிடுகிறான்.

அவளது தோற்றத்தில் கூட அந்த ஒரு கணத்திலே நிறைய வேறுபாடு இருப்பதாக அவனுக்குத் தோன்றுகிறது. அவளது உடைகள், அணிகள், நிற்கும் நிலை இவற்றில்கூட இதுவரையில் அவன் கண்டிராத வகை வகையில் அபரிதமான ஒருதேவையற்ற கவர்ச்சியும் - அடக்கமற்ற தன்மையும் இருப்பதாக அவன் உணர்கிறான்.

ஓ! அவள் இப்போது நிறைய மாறிவிட்டாள். தன்னிடமிருந்து வெகுதூரம் போய்க் கொண்டும் இருக்கிறாள். அவனுக்கு அதனைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

அவனது வேண்டுகோளுக்கிணங்க அவள் ஒருநாள் அவன் முன் அமர்ந்து அவனுக்கு மிகவும் பிடித்தமான சஹானா ராகப் பாடலொன்றை மிகவும் அருமையாகப் பாடிக்காட்டிய காட்சி அவன் மனத்தில் தோன்றியது.

நீல நிறத்தில் பூக்கள் போட்ட அந்த மஞ்சள் நிறச் சேலையின் முந்தானையை கழுத்தைச் சுற்றி வலது தோளில் கொண்டுவந்து வெண்ணிறமுத்து மாலையில் செருகிக்கொண்டு அவள் அமர்ந்து பாடிய அந்தப் பணிவும், பதவிசும்... ஓ அந்தத் தோற்றமும், குரலும், பாணியும் கூட அந்த சஹானா ராகத்தினைப் போலவே வெகுநளினமாக - நிதானமாக அமைந்திருந்ததை அவன் வெகுவாக ரசித்துப் பாராட்டியது அவனுக்கு நன்றாக நினைவுக்கு வருகின்றது.

இன்றைக்கு அந்த ஒரு கேள்வியில் அவளது அந்த 'இமேஜ்' உடைந்து நொருங்க - அவள்து இரசனைகள், ஆர்வங்கள், ஆற்றல்கள், எல்லாமே பொய்தானோ என்றொரு சந்தேகத்தைஅவனுள் கிளர்ந்தெழச் செய்கிறது.

அந்தச் சந்தேகம் அவனுக்குப் பெருத்த ஏமாற்றத்தை உண்டாக்குகிறது. அவளைப் பற்றித்தான் போட்டிருந்த கணிப்பு தவறிவிட்ட ஏமாற்றம். அவள் தன்னைவிட்டு விலகிக்கொண்டிருக்கிறாளோ என்ற ஏக்கம். தான் மட்டும் அந்த உன்னதமான கலாரசனையின் உச்சியில் தனித்து விடப்பட்டு விட்டேனோ என்ற தவிப்பு எல்லாம் சேர்ந்து அவனுக்கு ஒருவித வெறுப்பை ஏற்படுத்தியது.

இரு கவிதைகள்



கைதியின் குழந்தை

கூண்டுக் கிளிகள்
காதலில் பிறந்த
கூண்டுக்கிளிக்கு
எப்படி — எதற்கு
வந்தன சிறகுகள்.

கல்யாண்ஜி.

கேள்வி

இந்த மனிதக் கட்டையை எரிக்க
ஏன் மரக்கட்டையை அடுக்கிறீர்?
அது செய்த பாவம்தான் என்ன?

எஸ். கே. ஆத்மானந்தன்

நன்றி: கசடதபற

எழுத்தாளன்; என் கதையில் வரும் பாத்திரங்களை பாராட்டாதவர்களே இல்லை.

மனைவி: எங்க வீட்டுப் பாத்திரங்களைப் பார்த்துச் சிரிக்காதவர்களுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குத் தன்மீதே ஒரு வெறுப்பு தன் கணிப்புத் தவறிவிட்டதென்று தன் மீதே ஒரு கோபம். அந்த வெறுப்பும், கோபமும் தனது நிதானத்தை நிர்மூலமாக்கிவிட அவன் அவளோடு வழமைக்கு மாறான முறையில் சற்றுக் கோபமாகவும் - வரம்பு மீறியும் பேசிவிடுகிறான். அவனது அந்தப் பேச்சு அவளை வெகுண்டெழ வைத்துவிட்டது. அவளும் சில வார்த்தைகளைக் கடுமையாகப் பேசிவிட்டு உள்ளே போய் விடுகிறாள்.

இப்போது...?

நடந்து முடிந்துவிட்ட சம்பவத்தின் மூல காரணத்தைப் பரிசீலித்துத் தம்மீதே குற்றங்கண்டு தங்களுக்குள்ளேயே மறுகிக்கொண்டு அவர்கள் மௌனமாக இருந்தார்கள். அவன் மெல்ல அவளின் முகத்தை நோக்குகின்றான். அவளின் கண்களில் நீர்ப்படலம் திரையிட்டிருப்பதைத் துல்லியமான அவன் பார்வைகள் கண்டுபிடித்தபோது அவனது மென்மையான இதயத்தில் முள்ளொன்று தைத்துவிட்டாற் போல் உணர்கிறான்.

சட்டென்று எழுந்து உள்ளே போகிறாள். அவன் வெளியே புறப்படத் தயாராக வந்து, ''எழும்பு சந்திரா; அந்தப் படத்தைப் பார்த்திட்டு வருவம்'' என்று கூறிக்கொண்டு. அவள் விழிகளை நேரே பார்க்கக் கூசி' அதைத் தவிர்ப்பதற்காகக் கீழே சிலிப்பர்களைத் தேடிக் காலில் கொழுவிக்கொள்கிறான்.

அவள் எழுந்து. தானும் சிலிப்பர்களை அணிந்துகொண்டு வெளியே வருகிறாள். நிர்மலமான அவனது முகத்தைப் பார்த்துக்கொண்டு, "இப்ப அந்தப் படம் வேண்டாம். பூங்காவரை போய் உலாவிவிட்டு வருவோம்." என்று சொல்லிவிட்டு நேரே பாதையை நோக்குகிறாள். அவன் வினாக்குறியுடன் அவளைக் குறிப்பாக நோக்கிக்கொண்டு நின்றான். அவள் அதற்கு முன்னே இரண்டு அடிகளை எடுத்துவைத்தவள் நின்று திரும்பி, ''நான் என்னுடைய இரசனைகளையோ, ஆர்வத்தையோ மாற்றிக்கொண்டு விடவில்லை. எமது சிந்தனைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு இப்படியான சில மீறல்கள் உதவும் என்று நினைத்துத்தான் அதைப் பார்க்க விரும்பினேன். அதுவும், அதனை உங்களைப் போன்றவர்களோடு பார்த்து, உங்களோடு விவாதிக்கவும் மட்டும்தான் விரும்பினேன். நன்கு பண்பட்ட ரசனையுள்ளவர்கள் மேலும் தமது கலா ரசனையை உயர்த்துவதற்கு இவைகள் வழி வகுக்குமேயல்லாமல் அவர்களை இவை கெடுத்துவிட முடியாது." அவன் அவளையே பார்த்துக்கொண்டு கைகளை முன்னாலும், பின்னாலும் தட்டிக்கொண்டு மௌனமாக நின்றான்.

அவள் தொடர்ந்தாள்:

"ஆனால், இப்போது நாம் அந்தப் படத்தைப் பார்த்துத்தான் ஆகவேணுமென்று ஒன்றுமில்லை. எங்கள் மன அமைதியை மறுபடி பெறுவதற்காகப் பூங்காவரை போய்விட்டு இருட்டும்போது திரும்பலாம் என்று நினைக்கிறேன்.'' அவள் கூறிவிட்டு மெல்ல முன்னே திரும்பி நடந்தாள். அவன் மறுமொழி எதுவும் கூறவில்லை. கனத்த மௌனத்துடன் அவளது கால் விரல் மெட்டிகளைப் பார்த்தபடி அவள் பின்னே நடந்துகொண்டிருந்தான்.

ஏலேலோ அகிலேசா....

தரகர்: யாழ்ப்பாண மாப்பிளை படகுக்கார் வேண்டாமாம். படகு தந்தால் போதுமாம். யாழ்ப்பாண ரோட்டில் ஓட்டுவதற்கு.

மருத்துவம்

மருந்து வியாபாரி: என்ன வேணும்?

ஒருவர்: உங்க கலப்பட மருந்தொன்று தாங்க தற்கொலை செய்வதற்கு.

- அதிமதுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைக்கு ஒரு மாப்பிள்ளை

தாய்: ஏன்டி சுப்பிரமணியத்தைத் திருமணம் செய்ய மறுக்கின்றாய்?

மகள்: அவனொரு சுவாமிப்போக்கு.

தாய்: அப்போ... கனகசுந்தரத்தை ஏன் வெறுக்கிறாய்?

மகள்: ஹிப்பித் தலைமயிரில்லை.

தாய்: அப்போ... யோகநாதன்?

மகள்: அவன் படம் பாராத ஒரு பேய்.

தாய்: சோமசுந்தரம்...?

மகள்: அது ஒரு புத்தகப்பூச்சி.

தாய்: சிவபாதம்...?

மகள்: அது ஒரு பிஸ்னெஸ் பிசாசு. காசு காசு...

தாய்: இரத்தினசிங்கம்...?

மகள்: அது அரசியல் அலம்பினபடி.

தாய்: அப்ப சிவஞானம்...?

மகள்: அது கலையென்று அலையுது.

தாய்: ராஜரத்தினம்...?

மகள்: அது ஒரு கர்நாடகம். கர்நாடக இசைப் பைத்தியம்.

தாய்: அப்ப... அந்த டாக்டர் பொடியன் சிவலிங்கம்?

மகள்: அது நேஸ்மாருடன் சுத்தித்திரியும்.

தாய்: அப்போ... அந்த எஞ்ஜினியர் ரத்தினசிங்கம்.

மகள்: அதுக்கு இரும்புதான் கரும்பு... இரும்பை வளைத்துக்கொண்டிருக்கும்.

தாய்: உனக்கு புருஷலட்சணம் இந்த லோகத்திலே பிடிக்கிறது கஷ்டம்... நீ கல்யாணமில்லாமல் தான் இருக்கப்போறாய்!

மகள்: துறவியாப் போவன்.

தாய்: நான் முதல் சொன்ன சுப்பிரமணியத்தை சுவாமிப் போக்கென்றாயே... அவனைக் கல்யாணம் பண்ணி இரண்டுபேரும் துறவிகளாக வாருங்களேன்.

மகள்: !!!!!

பலரசம்

☐ ரோமானியச் சக்கரவர்த்தி அகஸ்டஸ் காலத்தில் கல்யாணம் செய்துகொள்ளாதவர்கள் மீது தண்டனை விதிக்கப்பட்டது. நாஜி ஜேர்மனியிலும் கல்யாணம் செய்யாத ஜேர்மனியினருக்குக் கடுமையான வரி விதிக்கப்பட்டது.

☐ மகாபீட்டர் ஒரு காலம் ரஷ்யாவின் அரசனாக இருந்தார். தாடி வளர்த்த வாலிபர்கள் பலரின் தாடிகளைத் தன் கையாலேயே வெட்டி எறிந்தார்.

☐ 12-ம் நூற்றாண்டிலேயே தாள் நாணயங்கள் சீனா பழக்கத்தில் இருந்ததாக மார்க்கபோலோ என்ற யாத்திரீகர் குறிப்பிட்டுள்ளார்.

☐ 1789-ல் நடந்த பிரெஞ்சுப் புரட்சியில் தோமஸ் பெயினும் கலந்துகொண்டார். பிரான்ஸ் பாஸ்டல் சிறை தகர்க்கப்பட்டபோது சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் என்ற கோஷமே எழுப்பப்பட்டது

☐ பிரெஞ்சுப்புரட்சியின் முடிவில் தோமஸ்பெயினுக்கும், ஜோர்ஜ் வாஷிங்டனுக்கும் பிரெஞ்சுப் பிரசா உரிமை வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

☐ ரஷ்யப் புரட்சிவீரன் லெனினிலும், சீனப் புரட்சி வீரனான சன்யாட் சென்னிலும் மகாத்மா காந்தி இரண்டு வயது இளையவர்.

☐ சிவநடனம் கலாயோகி ஆனந்தக்குமாரசாமி எழுதிய நூல்களில் ஒன்று. 'சிவநடனம்' பிரெஞ்சு மொழியிலும் வெளிவந்தது. இந்த நூலுக்கு முன்னுரை எழுதிய றொமெயின் றோலண்ட் - ஒரு பிரெஞ்சு அறிஞர்; இலக்கியத்துக்கு நோபல்பரிசு பெற்றவர்; முதலாம் யுத்த காலத்தில் யுத்தத்துக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தபடியால் நாடு கடத்தப்பட்டவர்; அறிஞர்கள் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கு எப்போதும் உரிமையுண்டு என்னும் பிரகடனத்தைத் தயாரித்து, உலக அறிஞர்களின் கையொப்பத்துடன் வெளியிட்டவர். இந்தப் பிரகடனத்தில் ஆசியாவிலிருந்து கையொப்பம் இட்டவர்கள் ரவீந்திரநாத தாகூரும், கலாயோகியுமே.

☐ படிப்படியாகப் பதவி உயர்ந்தவர் ராஜாஜி அவர்கள். சேலம் நகரசபைத் தலைவராயிருந்தவர். சென்னை முதல்வராகி பின்பு கல்கத்தா கவர்னராகி, இந்திய கவர்னர் ஜெனரலாகப் பதவி உயர்ந்தவர்.

☐ நேருஜி கடைசியாகத் துயின்ற படுக்கையின் தலைமாட்டில் இருந்த புத்தகம் பகவத்கீதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் நாணயம் ஒலிக்கின்றது.

திக்கவயல்

றொபேட் நொக்ஸ் என்பவர் ஓர் ஆங்கிலேய யாத்திரீகர். அவர் இந்நாட்டுக்கு நுழைந்ததும், கண்டி யரசனால் சிறைப்படுத்தப்பட்டார். சில வருடங்கள் சிறையிருந்த பின்பு தப்பியோடிய றொபேட் நொக்ஸ் இலங்கையைப்பற்றி சில சரித்திரக் குறிப்புக்கள் எனப் பெயரிட்டு நூல் ஒன்று எழுதியுள்ளார். அந்த நூலில் இலங்கையைப் பற்றிக் குறிப்பிடுகையில், இலங்கை மக்கள் மிகவும் சோம்பேறிகள் என்றும், இரவிரவாக வெற்றிலை சப்பிக் கொண்டு சாமம் சாமமாக ஊர்ப் புதினங்கள் கதைத்துக் கொண்டிருப்பார்கள் என்றும் நகைச்சுவையாகக் குறிப்பிட்டிருக்கின்றார். இந் நூல் 19 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது.

யப்பானில் இருந்து இலங்கைக்கு வந்த ஒரு யாத் திரீகர் கொழும்பிலிருந்து வெளிக்கிட்டு யாழ்தேவி ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். இயற் கைக் காட்சியினை ரசித்துக் கொண்டிருந்த அந்த யாத் திரீகரிடம் இலங்கையர் ஒருவர் மெதுவாகக் கதையி னைக் கொடுத்தார். யப்பானின் தொழில் விருத்தி பற்றி, அந்தயாத்திரீகருடன் ஒரு மணித்தியாலமாக உரையாடிய அந்த நபர் ''யப்பானில் இலங்கையருக்கு வேலைகள் வேக்கன்சி இருக்கின்றதா என்று கேட்டு வைத்தாராம். இடி இடி எனச் சிரித்த அந்த யப்பா னிய யாத்திரீகர் முழுச் சோம்பேறிகளான இலங்கை யருக்கு யப்பானிலே நோ வேக்கன்சி என்று கையை விரித்து விட்டாராம். முகம் சிவந்த அந்த இலங்கையர் 'குட்பை' சொல்லிவிட்டு அடுத்த கொம்பாட்மெண் டுக்குச் சென்று விட்டார்.

ஸ்பானியா ஒரு காலம் பொன்கொழிக்கும் நாடாக இருந்தது. லத்தீன் அமெரிக்காவில் இருந்து பொன்னை வெள்ளியையும் ஸ்பானியர் தமது நாட்டுக்கும் கொண்டு வந்தனர். இதனால் நாட்டிலுள்ளோர் யாவரும் வசதி யுடையவர்களாகிவிடவே, அவர்கள் யாவரும் சோம் பேறிகளாகி விட்டனர். சோம்பேறிகளாகிவிட்ட மக் கள் கூட்டம் உற்பத்தியை ஊக்கப்படுத்தாமல் இறக் குமதி செய்து உண்டு கொழுத்தார்களாம். இவ்வாறு ஹிப்பிகளாக மாறிய கூட்டத்தால் கலவரங்கள் அதிக ரித்தது. நாடு அழிவுப்பாதையை நோக்கிச் சென்ற தாக ஒரு வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

ஈழத்தில் ஒவ்வொரு இந்தியத் தொழிலாளியும் உழைக்கும் உழைப்பில் 12 பேர் சும்மா இருந்து உண்டு கொழுக்கின்றார்கள் என்று புள்ளி விபரங்கள் புகலுகின்றன.

எமது இலங்கைத் தீவும் ஸ்பானியா போலவே வரப்போகின்றது என ஒரு நண்பன் குறிப்பிட்டான். பார்த்த இடமெல்லாம் இறக்குமதிப் பொருட்கள் வரப் போகின்றனவாம். கடைத்தெருவெல்லாம் இறக்குமதிக் கருவாடு; பார்க்குமிடமெல்லாம் பம்பாய் வெங்காயம்; சென்ற இடமெல்லாம செக்கச் செவேலென்ற இறக்கு மதிச் செத்தல் மிளகாய், மா, சீனி, மண்ணெண் ணெய், சர்க்கரை அப்பப்பா... புதுயுகம் மலரப் போகின்றது என நிற்பாட்டினான் அந்நண்பன். 'ஆம் தம்பி செத்தலையும், வெங்காயத்தையும் இறக்குமதி செய்தால் இங்குள்ள பெரும்பாலான விவசாயிகளுக்கு என்ன வேலை? வெகுவிரைவில் வேலை இல்லாத அவர் கள் ஹிப்பிகளாகி விடுவார்கள். அப்போது புதுயுகம் ஒன்று மலரத்தானே செய்யும்'' என்று கதையை அத் துடன் நிறுத்தினேன்.

''கடன்பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்.'' என்றார் ஒரு கவிஞர். பண்டைய அரசன் கலங்கியதை இன்றைய நாடாள்வோர் மறக்க வில்லைப்போலும். பழைய கடனைத் திருப்பிக் கட்டாத பல்லாயிரம் விவசாயிகளுக்கு உடனடியாக மீண்டும் கடன் கொடுக்கும்படி அரசு கட்டளையிட்டுள்ளது. இது விவசாயிகளுக்குச் 'சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோல் இருக்கும் என்பதில் ஐயமில்லை. என்னிடம் ஆலோசனை பெற வந்திருந்த விவசாயி ஒரு வர், ''இந்த அரசாங்கம் பதவியில் இருக்கும் ஐந்து வருடமும், ஒரு வருடக் கடனை மற்றைய ஆண்டு

என்ன உனது நண்பன் மந்திரியா...? வா நல்ல பால்கோப்பி வாங்கித் தாறன்... என்னுடைய மகனுக்கு ஒரு உத்தியோகம்...

வயது போகப்போக உங்களுக்குக் காது கேட் கிறது குறைந்துகொண்டு போகுது... மந்திரியல்ல மாந்திரி... மாந்திரியம் செய்யிறவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பிக் கட்டாவிட்டாலும் தொடர்ந்து ஐந்து வருடங்களுக்குக் கடன் தருவார்களா?'' என்று கேட்டார். நானும் நகைச்சுவையாக 'ஆமாம்' என்றேன். உடனே அவர் சிரித்த சிரிப்பு அகிலமெல்லாம் கேட்டிருக்குமோ என்னவோ.

இலங்கையில் குடிசனம் பெருமளவில் பெருகி வருகின்றது. இதனால் ஒவ்வொரு நாளும் பல புதிய வயிறுகள் தோன்றிவருவதாக ஒரு பிரமுகர் குறிப்பிட்டார். இதை நகைச்சுவையாக அணுகிய முன்னாடி அரசியல்

மாப்பிள்ளை எடுக்கிறதென்றால் ரொம்பக் கஷ்டமாயிருக்கு...

யாழ்ப்பாண நியூ மார்க்கட்டிலே கொண்டு போய் விட்டுவிடு... ஒண்டைப் பிடிச்சு வருவள்.

பிரமுகர் ஒருவர், ''வயிறு மாத்திரமா தோன்றுகிறது? பிறக்கும்போது இரண்டு கைகளும் அல்லவா படைக்கப்படுகின்றது. இதைக்கொண்டு உற்பத்தியை ஊக்கப்படுத்தலாம் அல்லவா?'' என்று ஒரு போடுபோட்டுள்ளார்.

சிரித்திரன் அலுவலகத்தில் வேலைபார்க்கும் மெயில்வாகனத்தார் என்பவருடன் கதைத்துக்கொண்டிருக்கும்போது அவர், ''இந்த நாட்டில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் அறுசுவை உண்டி சரிப்பண்ணிச் சாப்பிடுவதற்கு இரண்டு கைகள் போதாது என்றும், மூன்று கைகள் வேண்டும் என்றும் முறுவலித்துள்ளார்.

பீக்ஸ் நீக்கப்பட்டுவிட்டது என்ற செய்தி கிடைத்ததும் அலறியடித்த அயல்நாட்டு உத்தியோகத்தர்கள் அநேகர். சிங்கப்பூர் பென்சன் எடுப்போர் அதிலும் அதிகம். இனிமேல் தாங்கள் எடுக்கப்போகும் பணத்தின் அளவு மிகவும் குறையப்போகின்றது என்ற ஏக்கம் அவர்களைக் கவ்விக்கொண்டது. இவர்களின் ஏக்கம் முடிவடையு முன்பு நிதியமைச்சர் புதிய குண்டு ஒன்றைத் தூக்கிப்போட்டார். பீக்ஸ் நீக்கப்பட்டாலும், அந்நிய நாட்டு நாணயங்களின் பெறுமதி கூட்டப்பட்டுள்ளதால், முன்பு பீக்ஸால் அதிக வருமானம் அடைந்தவர்களின் வருமானம் எதுவிதத்திலும் குறையாதாம். ''காவேரிதான் சிங்காரி; சிங்காரிதான் காவேரி''

அரசாங்க உத்தியோகத்தன் என்பவன் மாதத்தில் ஒருமுறை சம்பளம் காணும் ஒரு பாவி. முன்னூறு ரூபாவுக்கு மேல் சம்பளம்பெறும் இந்த அப்பாவிக் குடும்பத்தினரின் கூப்பன்களைப் பறிக்கச் சொல்லி நிதியமைச்சர் கூறியுள்ளார். இதனால் இலட்சக்கணக்கானோர் தமது கூப்பன்களை இழக்கின்றனர். இதுவரை தொழிலாளர்களும், விவசாயிகளுமே அரசினை அடிக்கடி மாற்றினர். இந்நிலை தொடருமானால் அடுத்த அரசாங்கத்தை அரசாங்க உத்தியோகத்தர்களே மாற்றியமைப்பர் என்று ஒரு பல்கலைக்கழக மாணவன் கூறியுள்ளான்.

இது எவ்வாறு இருப்பினும் பலருக்குக் கூப்பன் இல்லாமல் போனமை, கூப்பன் அடைவு பிடிப்போரைத் திகிலடையச் செய்திருக்கின்றது. தமது தொழில் இனி தலைகுப்புறப் படுத்துவிடுமென்று சிலர் கருதுகிறார்களாம்.

இவ்வாறு பலருக்குக் கூப்பன்கள் இல்லாதுபோன சமயத்தில்தான் 500 கூப்பன்களுக்கு ஒரு சங்கக்கடை திறப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்கின்றது. எத்தனையோ சில்லறைக்கடைக்காரர்கள் தாமும் உத்தரவு பெற்ற வியாபாரிகளாக நாயலைச்சலில் திரிகின்றார்கள்

புதிய அரசாங்கத்தின் பட்ஜெட் காய்ச்சல் கண்டுள்ளது. காய்ச்சலின் முடிவைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

மூன்று முடிச்சு படம் பார்க்கப் போனாயே ... திரும்பி வருகிறாய்...!

முடிச்சு மாறிகள் மணிப்பேர்ஸை பிக்பொக்கட் அடிச்சிட்டாங்க!

திருடன்: என்ன எங்க மகள் கவலையோடு இருக்கிறாள்?

மனைவி: யாரோ அவளுடைய இருதயத்தை பிக்பொக்கட் அடிச்சிட்டானாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுநகை

ஒருவர்: யாழ்ப்பாணத்தில் பஸ் வண்டிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மற்றவர்: காதலர்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

ஒருவர்: என் நல்ல காலம் பொலிடோலைக் குடிச்சன் தப்பிவிட்டன்.

மற்றவர்: எப்படி?

ஒருவர்: அதிலும் கலப்படம்

*

வயோதிபர்: தங்கச்சி உங்களுக்கு நாணம் இருக்கோ?

இளம்பெண்: இல்லை. அதை வீட்டில் வைச்சிட்டுத்தான் இந்தச் சந்தியில் வந்து நிற்கிறன்.

*



ஒருவர்: உயிரா, உத்தியோகமா பெரிது?

மற்றவர்: உத்தியோகம்.

ஒருவர்: உயிர் போனால் சுவர்க்கம். உத்தியோகம் போனால் நரகம்.

*

ஒருவர்: மனைவி பின்னால் வருகிறாளோ பார்.

மற்றவர்: என்ன விஷேசம்?

ஒருவர்: நான் துறவியாகப் போகிறன்.

*



கலா: வசந்தா இப்ப சமயபாடத்திலை நல்ல அக்கறை.

மாலா: அவளொரு புனிதவதி.

கலா: இல்லை சமய பாட ஆசிரியரைத் தான் அவள் விரும்புகிறாள்.

*

அயோக்கியன்: எனக்குக் காந்தி என்றால் விரோதி.

மற்றவர்: ஏன்?

அயோக்கியன்: அவர் உண்மை பேசுவதால்

யாழ்ப்பாண நகரிலே

விவசாய மருந்துகளுக்கு

பெயர் பெற்ற ஒரே இடம்

லிங்கம் ஸ்ரோர்ஸ்

168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைத் திரும்பிப் பார்த்தார் புண்ணியமூர்த்தி. அவன் மௌனமாக மணலை அளைந்து கொண்டிருந்ததைக் கண்டதும் தான் கூறிய விஷயங்களைப் பற்றித் தான் அவன் ஆழ்ந்து சிந்திக்கிறான் என்று அவருக்குத் தோன்றியது. அவனுடைய மனதில் எதிரொலிக்கும் எண்ணங்களை அறிவதற்கு ஆவலாகவும் இருந்தது. அதை அவர் நேரிடையாகக் கேட்காமல் "என்னையோசனை?" என்று கேட்டார்.

ருந்தால் இந்தப் பாசத்துக்கும் பிரியத்துக்கும் அதுபெரும் இடைஞ்சலாக இருக்கும். எனக்கும் உமக்கும் ஒரு ஒட்டுதல் இருக்காது. பெயரளவில் தான் தகப்பன் மகன் என்று இருப்போம். இது எங்கள் ரெண்டு பேருக்கும் திருப்தியையும், நிம்மதியையும் தராது. அது ஒரு சுமையாகப் போய்விடும். அந்தச் சுமையை வாழ்க்கை முழுதும் சுமக்க வேண்டியிருக்கும். அதுவே மனதில்புண்ணாகிப் புரை

புருஷனும் உம்மீது தீர்த்துக் கொண்ட விதத்தை நினைக்கும் போதுதான் என் மனம் ஆற மாட்டேங்குது. அவை அப்புக் காத்து குடும்பமாகவும், பெரிய சாதிசனத்தில் உள்ளவையாயும் இருக்கலாம். அவையின்ரை நோக்கில் நான் செய்தது பெரிய குற்றமாகவும் இருக்கலாம். அதற்காக என்னைத்தண்டித்து விட்டினம். அதோடை அவை விட்டிருக்க வேண்டும். ஆனால் நான் செய்த காரியத்தில் இந்த விதத்

அன்னை அழைத்தாள்

-இளங்கீரன்

ரவி தன் மனதில் எண்ணங்கள் முழுவதையும் அப்படியே கூறாமல் "நீங்கள் சொன்ன விஷயங்களிலிருந்து உங்களைப் பூரணமாய் விளங்கிக் கொண்டேன். உங்கள் மேல் எனக்கு இருந்த தவறான அபிப்பிராயம் நீங்கி விட்டது. தூய்மையான அன்பால் கட்டுண்ட தாய், தகப்பனுக்கு நான் மகனாய்ப் பிறந்ததை நினைக்கும் போது எனக்குச் சந்தோஷமாகவும் பெருமையாகவும் இருக்குது" என்று உற்சாகத்துடன் கூறினான்.

ரவியின் இந்த வார்த்தைகள் புண்ணியமூர்த்தியின் மனதில் இருந்த துயரங்களையும் உறுத்தல்களையும் அந்த விநாடியே அழித்து விட்டன. பூரிப்பால் முகம் மலர "மற்றவை என்னைப் பற்றி என்ன கருதியிருந்தாலும் எனக்கு கவலையில்லை. கவலைப்பட்டதும் கிடையாது. அது எனக்கு அற்பமான விஷயம். ஆனால் நீர் இப்ப கூறியதுதான் எனக்கு முக்கியம். நீர் எனது மகன். அதுவும் ஒரேயொரு பிள்ளை உம்மீதுதான் எனக்கு ஆழ்ந்த பாசமும் பிரியமும் இருக்க முடியும். உமக்கும் அப்படித்தான். என்னிலை நீர் தவறான அபிப்பிராயம் வைத்தி

யோடி, தாங்க முடியாத வேதனையை சீவியம் முழுதும் அனுபவிக்க வேண்டியிருக்கும். உம் தாயாரால் மனதில் எந்தத்துன்பத்தையும் நான் அனுபவித்தது கிடையாது. ஆனால் அவபெற்றுத் தந்த செல்வத்தால் நான் துன்பத்தை அனுபவிக்க வேண்டி வந்துவிடுமே. இதை எண்ணித் தான் நான் கலங்கிக் கொண்டிருக்கிறேன். இப்பதான் என்மனதுக்கு ஆறுதலாயிருக்குது" என்று சொல்லி நிறுத்தியவர், சில விநாடிகள் மௌனமாக இருந்து விட்டு மேலும் தொடர்ந்தார்.

"ஆனால் என்னிலை உள்ள வஞ்சத்தை எனது சகோதரியும் அவ

திலும் சம்பந்தப்படாத உம்மையும் தண்டித்ததுதான் கொடூரமானது. தங்களின் சாதிக் கௌரவத்தையும் குலப்பெருமையையும், குடும்ப அந்தஸ்தையும் காத்துக் கொள்வதற்கு உம்மையும் ஒதுக்கி இழிவு படுத்தி மனதைப் புண்படுத்துவது தான் தங்களின்ர சமூக தர்மம் எண்டால், அதுதான் தமிழர் பண்பாடு எண்டால் இதைப்போல ஒரு கொடூரமான சமூகதர்மம், பாண்பாடு உலகத்திலே வேற ஒண்டு இருக்க முடியாது. அவை தங்களைப் பெரிய மனிசர் எண்டு எண்ணிக் கொண்டாலும் உண்மையில் அவை சின்ன மனிசர் மிக மிகச் சின்ன மனிசர்"

இரு முனைகள்

<——————————>

எங்கே சுதந்திரம் நிலவுகின்றதோ அதுவே என் நாடு.
- பெஞ்சமின் பிராங்ளின்

எங்கே சுதந்திரம் இல்லையோ அதுவே என் நாடு.
- தோமஸ் பெயின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியமூர்த்தி இதை ஆத்திரத்தோடு மட்டுமல்லாமல் அருவருப்போடும் கூறினார்.

தன் மீது அவருக்குள்ள பற்றுதலையும் பாசத்தையும் கண்டு ரவிக்கு மேலும் பிரமிப்பயிருந்தது அவருடைய ஆத்திரமும் அவர் கூறியதும் நியாயமாகவும் தோன்றியது. மாமி வீட்டில் தான் நடத்தப்பட்ட விதம் மனதில் காட்சியாக விரிந்து மறைந்தது. சிறிது நேரம் அதையே எண்ணிக் கொண்டிருந்தவன் ''நீங்கள் பிழை செய்துவிட்டீர்கள்'' என்று திடீரென்று சொன்னான். புண்ணியமூர்த்தி அவனைக் கேள்விக் குறியுடன் பார்த்தார்.

''அம்மா செத்த பிறகு தான் நீங்கள் மலேயாவுக்கு வந்தீங்க. ஆனால் அம்மாவைக் கல்யாணம் முடித்த உடனேயே அவவையும் கூட்டிக் கொண்டு இங்கே வந்திருந்தால் மாமி வீட்டில் நான் இப்படி ஒரு தண்டனையை அனுபவிக்கவோ. நீங்கள் இப்படி ஆத்திரப்படவோ, துயரப்படவோ நேர்ந்திருக்காது'' என்று வினக்கினான் ரவி.

''ஓம் மெய்தான் அப்போ இது என் மனதில் படவில்லை. இங்கே மலேயாவில் சாதிப் பிரச்சினைகள் எல்லாம் இல்லை. இங்கே பல இனத்தைச் சேர்ந்தவையும் சாதியைச் சேர்ந்தவையும் இருக்கினம் அவைக்குள்ளே கலப்புத் திருமணம் செய்து கொண்டவையும் கல்யாணமாகாமலே ஒருவரையொருவர் சேர்த்துக் கொண்டு வாழ்கிறவையும் இருக்கினம். ஆனால் இதை இங்கே யாரும் பொருட்படுத்துவதுமில்லை. ஒதுக்கிவைத்துத் தண்டிக்கிறதுமில்லை, இங்கேயும் யாழ்ப்பாணத்தார்கள் நிறைய இருக்கினம் தான். ஆனால் ஊரில் உள்ளது போல் சாதி வெறியை இங்கே காட்டிக் கொள்கிறதில்லை. அதை இந்த நாடு ஏற்றுக்கொள்ளாது. அவைக்குள்ளே கலப்புக் கல்யாணம் நடந்திருக்குது இங்கே உள்ள யாழ்ப்பாணத்தார் அதை ஒரு பெரிய பிரச்சினையாய் எடுத்துக் கொள்ளவுமில்லை. ஆகையால் நீர் சொன்னதுபோல அப்பவே அம்மாவையும் இங்கே கூட்டிக் கொண்டு வந்திருந்தால் இப்படியெல்லாம் துயரப்பட வேண்டி வந்திருக்காது. அம்மாவும் இடையில் செத்திருக்க வேண்டியும் இருக்காது. எனக்கு ஊரில் நடந்த புறக்கணிப்பும், இழிவும் தான் அவமனதைப் பெரிதும் பாதிச்சு உயிரைப் போக்கிவிட்டாது.'' என்று கலங்கிய கண்ணைத் துடைத்துக் கொண்டார், புண்ணியமூர்த்தி.

''சரி இதையெல்லாம் எண்ணி வருத்தப்படுவதில் பிரயோசனமில்லை. ஒருவகையில் அம்மாவோடு நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை உங்களுக்கு நிறைவாய் இருந்திருக்குது அது போதும்'' என்று தந்தைக்கு ஆறுதல் கூறினான் ரவி.

புண்ணியமூர்த்தி நிம்மதியாய் ஒருபெருமூச்சு விட்டுக்கொண்டே 'ஓம் அது எனக்கு நிறைவுதான்' என்று கூறிவிட்டு ''பொழுது மங்கிவிட்டது. எழும்பும் பினாங்கைச் சுற்றிப்பாப்பம்'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தார்.

இருவரும் பீச்சிலிருந்து கிளம்பும்போது நகரம் மின் விளக்குகளால் பளிச்சென்றிருந்தது. விளம்பரங்களுக்கான வர்ண ஒலிகள் வேறு வர்ணஜாலம் செய்து கொண்டிருந்தன. கடைகள் கண்ணைப் பறிக்கும் நானாவிதப் பொருட்களுடன் வாவா என்று அழைத்துக் கொண்டிருந்தன. ஹோட்டல்கள் மாத்திரமின்றி பேவ்மெண்டில் கூட சுடச் சுட புரியாணி, புரோட்டா, கொத்து ரொட்டி, பாயாசம், சேமியாக் கஞ்சி, மீ, மீஹூன் போன்ற பலவகை உணவுகளை விற்கும் சிறு சிறு காண்டாக் கடைகளும் கலகலப்பை ஊட்டின. இங்கேயும், ஹோட்டல்களிலும் சாய்ப்புகளிலும் ஆட்கள் நிறைந்திருந்தனர். வீதிகளிலும் ஜே ஜே என்று ஒரே ஜனமயம்தான். எத்தனை வகையான ஜனங்கள். எத்தனை விதமான பருவங்கள் நிறங்கள். எத்தனை விதமான ஆடை அணிகள். எத்தனை பாஷைகள். மூக்கை அள்ளும் மணங்கள்.

இத்தனை கலப்புகளுடன் காதலர்களாய், தம்பதிகளாய், குழந்தை, குட்டிகளோடு குடும்பமாய் நண்பர்களாய், குமரிகளின் கூட்டமாய், இளவட்டங்களின் கும்பலாய் வீதிகளில் நடந்தபடி —

ஒருவர்: என் நல்ல காலம். பொலிடோலைக் குடிச்சன் தப்பி விட்டன்.

மற்றறவர்: எப்படி?

ஒருவர்: அதிலும் கலப்படம்.

பய பக்தி

பெண் தெய்வம்: என்ன கவலையோடு இருக்கிறீர்கள்?

ஆண் தெய்வம்: தமிழனுக்கு வீரத்தைக் கொடுப்போம் என்று இலங்கைக்குப் போனேன் அவன் என்னைக் கண்டும் பயத்தில் ஓடுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலாய், சீன, பறங்கி, வட இந்திய, தமிழ் கன்னியர் சைக்கிளில் வரிசையாய்ச் சென்றபடி.

காணும் முகங்களிலெல்லாம் உற்சாகமும் மகிழ்ச்சியும் பொங்கும் படி —

கார்களும், சைக்கிள், ரிக்ஷோக்களும் முன்னும் பின்னுமாய் ஊர்ந்தபடி —

இப்படி எத்தனையோ காட்சிகள். பலவர்ணக் காட்சிகள் கலகலப்பான காட்சிகள்.

இத்தனையையும் பிரமிப்போடும் குறுகுறுப்போடும் பார்த்தவாறே தந்தையுடன் நடந்து கொண்டிருந்த ரவீந்திரன் "ஐயா சொன்னது உண்மைதான். பகலையும் விட இரவில் தான் பினங் அழகாய் இருக்கிறது" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பேம்மெண்டில் இருந்த காண்டாக் கடைகளில் ஒன்றின் முன்னால் நடையை நிறுத்திய புண்ணியமூர்த்தி "ஏதாவது சாப்பிடலாமே?" என்றார்.

நடந்ததில் ரவீந்திரனுக்கும் பசி எடுத்திருந்தது. அவன் தலையசைத்தான்.

(தொடரும்)

"துன்பமே போ" என்று எழுதினீர்களே....!

அஞ்சலி

எழுத்தாளனாக வேண்டுமென்ற எண்ணம் எழவே, அவர் திரு. வி. க. அவர்களிடம் மாணவனாகச் சேர்ந்துகொண்டார். ஒரு நாளைக்கு நூறு தமிழ் சொற்கள் படிக்க வேண்டுமெனக் கட்டளையும் பிறந்தது. இப்படிப் படிக்கின்ற காலத்தில் "வாணன்" என்ற சொல் வந்தது. அந்த மாணவன் குருநாதரை அணுகி, "வாணன் என்றால் வாழ்பவன்; நான் தமிழுக்காக வாழப்போகின்றேன். என் பெயரைத் 'தமிழ்வாணன்' என்று மாற்றிக்கொள்ளப் போகின்றேன். உங்கள் ஆசி வேண்டும்" எனக் கேட்டான். திரு. வி. க. திருவுளம் மகிழ்ந்து தனது ஆசியை வழங்கினார். தமிழ்வாணன் என்ற புனை பெயருடன் எழுத்துலகம் புகுந்தவர்தான்; இந்தியாவில் இரண்டு லட்சத்திற்குமேல் விற்பனையாகும் ஐந்து பத்திரிகைகளில் ஒன்றாகிய கல்கண்டின் ஆசிரியராக இருந்து, அண்மையில் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தவர்.

கல்கண்டுப் பத்திரிகை சிறுவர்களுக்காக ஆரம்பித்து, காலப்போக்கில் மாணவர் பத்திரிகையாகிப் பின்னர் எல்லோரும் படிக்கக்கூடிய பத்திரிகையாக மாறியது. கல்கண்டின் முப்பத்திரண்டு பக்கத்தையும் தானே எழுதிக்கொள்வதால்தான் அதிக விற்பனையாகிறது என்று கூறிக் கொள்வார்.

இருந்துபடிக்க நேரமில்லா உலகில் இரத்தினச் சுருக்கமாக எழுதும் முறையை அறிமுகப்படுத்திய பெருமை தமிழ்வாணனையே சாரும். அவர் மறைந்தபோதும், தமிழ்வாணன் ஜேர்ணலிசமும் தமிழ்வாணன் வைத்தியமும், துப்புத்துலக்கிய சங்கர்லாலும் மறையப்போவதில்லை.

கச்சேரியின்
ஆரம்பம் முதல்
இறுதி வரையிலும்
பக்கத்திலிருந்து
பக்கபலமாக
தாளம் போட்டு
தவில் வித்துவானை
தடம் புரளாது
வழிநடாத்திய
ஏணியான ——
"தாளக்காரரை"
மனதார மறந்து
தவில் வித்துவானுக்கு
மாலை சூட்டி
பாராட்டுகின்றார்கள்:

- முருகு -

ஏன்?

கழுதை... உன்னை யார் கெட்டவார்த்தை பேசச் சொன்னது?

அந்தச் சொல் மிக்க மந்திரமில்லை என்று ஆசிரியர் சொல்லித் தந்தாங்க... நீங்க உச்சரித்தத்தான் நானும் உச்சரித்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்நகரில்
சகல உள்ளூர்
விளை பொருட்களுக்கும்
சாய்ப்புச் சாமான்களுக்கும்
பெயர் பெற்ற ஒரே இடம்.

சிவகுமார் ஸ்ரோர்ஸ்

282, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7738.

வட பகுதியின் அழகியநகர் பருத்தித்துறை
அங்கே
சகலவித மின்சாரப் பொருட்களுக்கும்
பெயின்ற் வகைகளுக்கும்
ஒரே இடம்.

ராஜன் எலெக்றிக்கல்ஸ்

பஸ் நிலையம், பருத்தித்துறை.

அண்ணா கோப்பிக்கு நிகர் அண்ணா கோப்பியே



அண்ணா கோப்பி

தயாரிப்பாளர்:
அண்ணா தொழிலகம், இணுவில்.

அழகுக்கலைக் கோலம் தரும்
அற்புதப் பிடவைத் தினிசுகளுக்கு
ஒப்பற்ற இடம்

சிங்காரம்ஸ்

நங்கையர் நாடும் நவநாகரீக நகைகளுக்கு

டைமா நகை மாளிகை

செட்டியார் தெரு, கொழும்பு.

தொலைபேசி: 20875

மில்க்வைற்
தயாரிப்புகளுக்கு

நீங்கள் கொடுக்கும்
ஆதரவு
நாட்டின்
பொருளாதார
வளர்ச்சிக்கு
கொடுக்கும்
ஆதரவாகும்.

MWS மில்க்வைற்

யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியச் சாரல்

சித்திரா

- பிரச்சாரமில்லாத எந்த ஒரு கலையாலும் பிரயோசனமில்லை. ஆனால் வெறும் நெருப்பு, அக்கினி, அடி, உடை என்று எழுதுவதால் மட்டும் பிரச்சார நோக்கம் நிறைவேறிவிடாது. ஓர் அரசியல் கட்சியின் கொள்கை அறிக்கை, தேர்தல் சுவரொட்டி, மேடை முழக்கம் இவற்றிலிருக்கும் பிரச்சாரத்திற்கும், ஒரு கவிதையிலிருக்கும் பிரச்சாரத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை நம் கவிஞர்கள் உணரவேண்டும். கட்சியின் பிரச்சாரம் அக்கட்சியில் ஈடுபாடில்லாதவர்களை எரிச்சலடைய வைக்கும். கவிஞனின் பிரச்சாரமோ எதிர்த்தரப்பினரைக் கூட ரசிக்கவைக்கும்; உணர வைக்கும்; ஒப்புக்கொள்ளவைக்கும்.

  - சக்திக்கனல்

- வெள்ளிவிழாக் கண்ட பிரபல எழுத்தாளர் சொக்கன் அவர்களும், இளம் எழுத்தாளர் ஆ. சிவனேசச்செல்வன் அவர்களும் எம். ஏ. பரீட்சையில் சித்தியெய்தியதறிந்து, எழுத்துலக நண்பர்கள் அவர்களை மனமார வாழ்த்துகிறார்கள்.

- ஞானபீடப் பரிசுபெற்ற எழுத்தாளர் அகிலன் ரஷ்யா செல்கிறார். எழுத்தாளர்களின் பிரயாணங்கள் வாசகர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி ஊட்டும் விஷயம். பிரயாணங்கள் தரும் அனுபவத்தேட்டங்கள், அற்புதமான இலக்கியப் படைப்புகளாகப் பரிணமிக்கின்றன. அகிலனின் மலேஷியப் பயணம் ''பால்மரக் காட்டினிலே'' நாவல் உருவாக வழிவகுத்தது. ரஷ்யப் பயணம் அருமையான ஒரு புதிய படைப்பை உருவாக்க வழிவகுக்கட்டும் என வாழ்த்துகிறோம்.

- மட்டக்களப்பு மாவட்ட கலாச்சாரப் பேரவைக் கலைவிழா, மட்டு நகரில் நவம்பர் 5-11-77 — 6-11-77 ஆகிய திகதிகளில் நடைபெறும். இதில் சிறப்பு நிகழ்ச்சியாக '' மானிலம் பயனுற வாழ்வதற்கே'' என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெறும்.

- தமிழக பிரபல பத்திரிகைகள் அனைத்திற்கும் ஒருசேர மாறுதல் நிகழ்ந்திருப்பது வியப்புக்குரியது. மாபெரும் வாசக வட்டத்தைக் கொண்ட 'கல்கி' நின்றுவிட்டது அதிர்ச்சிக்குரிய செய்தி. சில எழுத்தாளர்கள் இதைத் தொடர்ந்து வெளிவரச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது. தினமணிக் கதிரிலிருந்து சாவி விலகி 'குங்குமம்' என்ற இதழை வெளியிடவிருக்கிறார்.

- நமது இலங்கை வானொலியில் இரவு எட்டு மணி முதல் ஒன்பது மணிவரை நடைபெறும் ''முஸ்லீம் நிகழ்ச்சி" பற்றி எனது கருத்துக்கள் சில. இதை ''முஸ்லீம் நிகழ்ச்சி'' என்று சொல்வதைவிட முஸ்லீம்கள் பங்குபற்றும் நிகழ்ச்சி என்று சொல்வதே சாலப் பொருத்தம். அவர்களுக்கே உரிய சமய நிகழ்ச்சிகளைவிட சிறுகதை, நாடகம், பா நாடகம், கவிதை, விவாத அரங்கு, விழாத்தொகுப்பு நிகழ்ச்சிகள் என்று தரமான சிறப்பான நிகழ்ச்சிகளும் இதில் ஒலிபரப்பாகின்றன. பாராட்டுக்களைப் பெறக்கூடிய இந்நிகழ்ச்சிகள், 'முஸ்லீம் நிகழ்ச்சி' என்ற ஒரு வட்டத்திற்குள் அடக்கப்படுவதன் மூலம், பரந்துபட்ட நேயர்வட்டத்தை இழந்து விடுகின்றது. ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு எட்டு மணிக்கு சிறப்பான நாடகங்கள் ஒலிபரப்பாகின்றன. விஷயம் தெரிந்தவர்கள் மட்டும் தவறாது கேட்கிறார்கள்.

முனியப்பராணே!

பெண்புத்தி பின்புத்தி... உண்மைதானே நாகப்பு...?

முத்தவெளி முனியப்பராணை உண்மை... அந்தக் காடையன்கள் நகைகளையெல்லாம் அடிச்சுப் பறிச்சுப்போட்டுவிட பிறகும் வேலியில்லாமல் தாலியைப் போட்டுத் திரியிறாளே!

மன்னிக்கவும்!

அந்த ரேடியோ ஸ்தாபனத்தில் வேலைபார்ப்பவர் நீண்ட காலமாக அந்த அழகியைப் பின்தொடர்ந்தார். அவருக்குத் தன் காதலைத் தெரிவிப்பதற்கு ஒரு நாள் அரிய சந்தர்ப்பம் கிட்டியது அழகியோ சந்தோஷத்தைப் பிரதிபலிக்கும் முகபாவத்துடன் தென்பட்டாள்.

ரேடியோ அறிவிப்பாளர் அவளை அணுகி, உணர்ச்சிப் பிரவாகத்தில் தன் நீண்ட காலக் காதலை நீட்டி உரைத்தார். அவளும் அமைதியாக எல்லாவற்றையும் செவிமடுத்தபின் '' நான் மன்னிப்புக் கேளாமல் வாழ்பவனுக்கே வாழ்க்கைப்பட விரும்புகிறேன். நீங்கள் 'மன்னிக்கவும்' என்று ரேடியோவில் சொல்வது உங்கள் பழக்க தோஷமாச்சே!'' என்றாள். வானொலி அறிவிப்பாளர் 'மன்னிக்கவும்' என்று கூறி அங்கிருந்து நழுவினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோஜா நகரம்

ரஷ்யாவில் டொனட்ஸ்க் என்பது நிலக்கரிச் சுரங்க நகராகும். இங்கு பத்து இலட்சம் மக்கள் வசிக்கின்றூர்கள், இங்கு பத்து இலட்சம் ரோஜா மரங்களும் நாட்டப்பட்டு மணம் விசுகின்றன.

சகல

உள்ளூர் விளைபொருட்களுக்கும் சபாஸ் தேயிலைக்கும்

விஜயம் செய்யுங்கள்

ராஜா ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி, — நெல்லியடி.

ரேகாவும் ஜெயபாரதியும்

"தமிழ்ப்படங்கள் நாடகங்களைப்போல இருக்கின்றன. எனக்கு நாடகத்தில் நடிக்கவேண்டும் என்ற ஆசை வரும்போது தமிழ்ப் படத்தில் நடிப்பேன்." என்று ஒரு பேட்டியில் ரேகா கூறியுள்ளார்.

- ரேகா

"மலையாளப்படங்களில் நடிக்க ஆரம்பித்த பிறகு, தமிழ்ப்படங்களில் நடிப்பதை நான் விரும்பவில்லை. காரணம், யாராலும் காப்பாற்ற முடியாத அளவிற்கு தமிழ்ப்படவுலகம் சீர்குலைந்து போய்விட்டது. நான் அறிந்த வரையில் தமிழ்ப்படவுலகம் இந்த ஜன்மத்தில் முன்னேறுது."

- ஜெயபாரதி

திரைப்பாடம்

நடிகைகளிலே லட்சுமியைப்போல் எத்தனை பெரிய வசனம் என்றாலும் ஒரே தடவையில் படித்து மனப்பாடம் செய்பவர்கள் வேறு யாராவது இருக்க முடியுமா என்றால் அது நடிகர் திலகம் சிவாஜிகணேசனைத்தான் இருக்க முடியும். நடிகர்களில் நீண்ட வசனங்களை இலகுவில் மனப்பாடம் செய்பவர்கள் இவ்விருவருமே

(சாப்)பாட்டுக் கதை

நல்ல கல்யாணச் சாப்பாடு போட்டிருப்பாங்களே!

''கல்யாண சமையல் சாதம் காய்கறிகளும் பிரமாதம்" என்ற பாட்டைப் போட்டாங்க... சாப்பாடு போடவில்லை.

தம்பி தும்பியாப் போனன்

தாய்: ராசா... தோசைக்கடைகளை நம்பி கொழும்பில் இராதே! முட்டை, பாலென்று நல்லாய்ச் சாப்பிடு... புயல் வானிலை ஆராய்ச்சி நிலையத்திற்குச் சொல்லாமல் வரும்.

- ஜோக்கிரட்டீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொடி நாடகம்

சீமையால் வந்த சீமந்த புத்திரன்

மகள்: டாக்டர்... அப்பாவிற்குப் பைத்தியம் பிடித்து விட்டது. காப்பாற்றுங்க.

தாய்: டாக்டர்! உலக்கையைப் பிடித்துக் கொண்டு அதற்குப்பின் மறையப் பார்க்கிறார்.

டாக்டர்: யாரிடமாவது கடன்பட்டிருக்கிறாரா?

மகள்: அவர் கடன்படத் தெரியாதவர். ஒரு நாள் யாழ்ப்பாணம் வர பஸ்ஸிற்குக் காசில்லாமல் வவுனியாவிலிருந்து நடந்து வந்து சேர்ந்தவர்.

டாக்டர்: ஆருக்கும் கடன் கொடுத்து ஏமாந்திருக்கிறாரா?

தாய்: அவர் ஒரு மறதிக்காரன்... சிலருக்கு ஐந்து பத்துத் தரமென்று கடன் கொடுத்திருக்கிறார் முன்பெல்லாம் கடன் கொடுத்ததை மறந்து.

டாக்டர்: யாரும் எதிரிகள் இருக்கிறார்களா...?

தாய்; ஐயோ இது ஒரு காந்தி... பாம்பு கடிக்க வந்தாலும் பால் வைப்பார்...

டாக்டர்: தலையடிபட விழுந்திருக்கிறாரா எப்பொழுதாவது?

மகள்: காலடிபட விழுந்திருக்கிறார்... தலை கீழாக யோகப்பியாசம் செய்யும்போது.

டாக்டர்: திடீர் அதிர்ச்சிச் சம்பவம் ஏதாவது நடந்திருக்கிறதா?

தாய்: இல்லை டாக்டர்... நம்ம மகன் சீமையால் ஒரு ஹிப்பியோடு வீடு வந்திருக்கிறான். அந்த ஹிப்பி ஆணோ, பெண்ணோ என்று யோசித்ததிலே மூளையிலே அடிச்சிட்டுது.

டாக்டர்: ! ! ! !

அறுசுவை வரலாறு

இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் எடை கூடியவர் லங்காசயரின் எம். பி. யாகும். சிமித் என்று செல்லமாக அழைக்கப்படும் இவரின் நிறை 336 இருத்தலாகும்.

■

இலங்கை வரலாற்றில் முக்கிய இடம்பெறும் இராசசிங்கன் என்ற அரசன், கடைசியில் மூங்கில் சிராய் குத்தியதால் ஏற்புக்கொண்டு இறந்துபோனான்

■

வரலாறு படிப்பித்துக்கொண்டிருந்த எனது சரித்திர ஆசிரியர் என்னிடம் கேள்வியொன்று கேட்டார். இலங்கையில் தமிழ்பேசும் பௌத்தர்கள் ஏன் இல்லை? சிங்களம் பேசும் இந்துக்கள் ஏன் இல்லை? என்பதே அக்கேள்வியாகும். இன்றுவரை சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். உங்களுக்காவது விடை புரிகின்றதா?

■

கண்டி இராசதானி மீது ஆங்கிலேயர்கள் தொடுத்த முதற்போராட்டம் தோல்வியில் முடிவடைந்தது. படை வீரர்கள் தோல்வியில் துவண்டிருக்கும்போது, மேலதிக படைகளை அனுப்புமாறு கொழும்புக்குச் செய்தி அனுப்பப்பட்டது. இச்செய்தி கொழும்புக்குக் கிடைக்கவில்லை. படைவீரர்கள் உணவுக்காகக் கஷ்டப்படுவார்கள் என்று நினைத்த கொழும்பு நிர்வாகம், நூற்றுக்கணக்கான மாடுகளைக் கண்டிக்கு அனுப்பிவைத்தது.

■

கடலில் திரியும் அந்நிய நாட்டு நீர்மூழ்கிக் கப்பல்களைத் துரிதகதியில் முறியடிப்பதற்காக உண்டாக்கப்பட்டது ஹிட்லரின் ''எம்டன்'' என்ற நீர் மூழ்கிக் கப்பற்படை. இப்படை இன்று மறைந்தாலும் மோசடிக்காரர்களை அழைப்பதற்கு எம்டன் என்ற சொல்லையே மக்கள் உபயோகிக்கின்றார்கள்.

■

கடலில் கடற்கண்ணிகளைப் பரப்பிவிட்டு, அந்நிய நாட்டுக் கப்பல்களை முதன்முதலில் அழித்தவர் ஹிட்லராகும்.

■

இந்தியாவின் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு எதிரான பல வழக்குகள் ஆங்கில நீதிபதிகளாலேயே விசாரிக்கப்பட்டன. வழக்குகளை விசாரிக்கும்போது நித்திரை தூங்கிக்கொண்டிருக்கும் இந்த நீதிபதிகள், வழக்குமுடிவில் இந்தப் பேதைகளுக்கு மரணதண்டனை வழங்குங்கள் என்று தீர்ப்பு வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். ஏ. எம். ஜவாஹிர்
43, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

□

எம். எம். ஜெஸீல்
39, ஆஸாத் வீதி,
சோனக தெரு.
யாழ்ப்பாணம்.

□

எம். எம். சறூப்
8, அசனா லெப்பை லேன்,
யாழ்ப்பாணம்.

□

ஏ. எச். லுக்மான்
102, முஸ்லீம் கல்லூரி வீதி,
சோனக தெரு,
யாழ்ப்பாணம்.

□

கே. பாஸ்கரன்
மே/பா. கே. அரசரத்தினம்
(பத்திரிகை நிருபர்)
மார்க்கட் லேன்,
மானிப்பாய்.

□

கே. புவன்
15/4, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

□

கி. நாகராசா
601/2 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

□

எஸ். றஞ்சன்
மே/பா. ஆர். பி. செல்வரட்ணம்
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

□

உ. த. சிவசுப்பிரமணியம்
20, நுவரெலியா றோட்,
கம்பளை.

MRS டாமோடிரன்

Mrs டா: ஹூ இஸ் தெட்சணாமூர்த்தி டார்லிங்?

Mr டா: அவர் தவில் என்ற நாவல் எழுதிய பேமஸ் நவலிஸ்ட்.

Mrs டா: நான் வாசிப்பதற்கு ஒரு தவில் வாங்கித் தாறீங்களா டார்லிங்.

Mr டா: வை நொட்...

முதலாளி: கடந்த ஏழு வருடங்களாக இருநூறு ரூபா சம்பளத்தில் வேலை செய்திருக்கிறாய். இந்த மாதம் தொடக்கம் நூறு ரூபா கூட்டியுள்ளேன்.

தொழிலாளி: வேண்டாமுங்க... நான் இன்னும் ஏழு வருடங்களுக்கு இதே சம்பளத்தில் வேலை செய்யிறன். எனக்குக் கூப்பன் தான் வேணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம்: Q/B 59/30

அவள்: "முயல் மார்க் நூல் போன்ற இடையுடையாள்...."

உங்கள் அழகிய தையல் வேலைகட்கு
"முயல் மார்க்" நூல்களையே பாவியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பனி,

கொழும்பு - 12.

122, நாவலர் வீதி, சி. சிவஞானசுந்தரம் அவர்களால் 122, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள கவின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org